பக்கங்கள்: 21 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 01 புதன்கிழமை 14.04.2021 கதிர் 160

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
முகவர்கள்
அனைவருக்கும்
'காலைக்கதிர்' நாளிதழின்
இனிய சித்திரைப்
புத்தாண்டு
நல்வாழ்த்துகள்







தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தீவிரவாதச் செயற்பாடுகளுக்குத் தடை தமிழ் நாட்டில் பலப்படுத்தப்பட்டது கடலோர பாதுகாப்பு

இலங்கையில் தீவிரவாத செயற்பாடுகளுக்கான தடைகளை தொடர்ந்து சர்வதேச வருகை மற்றும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அல்கெய்தா மற்றும் ஐ.எஸ். உட்பட 11 பயங்கரவாத குழுக்களை தடை செய்யும் நடவடிக்கையை இலங்கை ஆரம்பித்த நிலையில் இந்த அச்சுறுத்தல் உணரப்பட்டதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் குறித்த தடையை அடுத்து ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பாக அனைத்து மாநில ஆணையர்கள் மற்றும் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து மத அடிப்படைவாதிகள் விமானம் அல்லது கடல் வழியாக சட்ட விரோதமாக குடியேறுவதற்கான வாய்ப்பு குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் மத அடிப்படைவாதிகள் தமிழ்நாட்டில் தளம் அமைப்பதைத் தடுக்க உளவுத்துறையை பலப்படுத்தவும் மா நிலம் முழுவதும் கண் காணிப்பை தீவிரப்படுத்தவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வாரம், தீவிரவாத நடவடிக்கைகள் தொடர் பாக அல்கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட 11 குழுக்களை தடை செய்ய சட்டமா அதிபர் அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

காலைக்கதிர்
Kalaikkathir

இது ரகசியம் அல்ல!

இப்பத்தியில் ஏற்கனவே கூறிய பழமொழிதான். 'சோழியன் குடுமி சும்மா ஆடாது.' அரசியல்வாதிகளின் நகர்வுகளும் அப்படித்தான். இலங்கை ஜனாதிபதி

05

# முதல்வர் பதவிக்கு மாவை பொருத்தமேயற்றவர்; அதனால்தான் சம்பந்தன் தன்னை அழைத்து வந்தார் என்கிறார் விக்னேஸ்வரன்

## இப்போது வேலன் சுவாமியைக் களமிறக்கலாம் என்றும் கூறுகின்றார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.14

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராக அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் வேலன் சுவாமியை களமிறக்கலாம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின்போது கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு பதிலளித்தார். இது தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

வேலன் சுமாமிகளை ஒரு பொது வேட்பாளராக முதல்வர் பதவிக்கு நிறுத்த ஏனைய கட்சிகளும் ஏற்றுக்

05

# நம்பிக்கையை இழக்காதீர்கள்; உரிமையை வென்றெடுப்போம்

## சித்திரைப் புத்தாண்டில் தமிழரிடம் சம்பந்தன் தெரிவிப்பு



தமிழ் மக்கள் பல துன்பங்களுக்கு மத்தியில் சித்திரைப் புத்தாண்டை வரவேற்கின்றார்கள். என்னதான் துன்பங்கள், இடையூறுகள் வந்தாலும் எமது மக்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது. ஜனநாயக வழியில் இறுதி வரை போராடி எமக்கான உரிமைமையை நாம் வென்றெடுப்போம். இந்த நம்பிக்கையில் நாம் தொடர்ந்தும் ஓரணியில் பயணிக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

05

# இலங்கைக்கு வருகின்றார் சீனப் பாதுகாப்பு அமைச்சர்



சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பெய் பின்கீ இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இரு தரப்பு பேச்சுகளை மேற்கொள்ளும் நோக்கில் அவர் தமிழ் – சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சீனாவின் அதி உயர் பிரமுகர் ஒருவர் இலங்கைக்கு பயணம் செய்யும் இரண்டாவது

05

# கொழும்பில் கொரோனாவுக்கு 109 வயது தமிழ் வயோதிபர் பலி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அப்புத்துரை வேலுப்பிள்ளை என்ற 109 வயது தமிழ் வயோதிபர் நேற்றுக் கொழும்பில் கொரோனாத் தொற்றில் உயிரிழந்தார்.

05

# யாழில் மேலும் 18 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

## நல்லூரைச் சேர்ந்த வயோதிபப் பெண் சாவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 18 பேருக்கும், முல்லைத்தீவு, மன்னாரில் தலா ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் 20 பேருக்குக்

05

# முள்ளிவாய்க்கால் விபத்தில் படைச் சிப்பாய் உயிரிழப்பு!

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகயாமடைந்த படை சிப்பாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கெப்பற்றிக்கொலாவ பகுதியினை சேர்ந்த 37 வயதுடைய படையினர் ஒருவர் விடுமுறையில் வீடு செல்வதற்காக மோட்டார்

05

# தமிழருக்குப் புத்தாண்டு வல்லமை தர வேண்டும்!

## வாழ்த்துச் செய்தியில் சரவணபவன்



தென்னிலங்கையில் விஸ்வரூபமெடுத்துள்ள சிங்கள – பௌத்த பேரினவாதம், தமிழினத்தை வேரோடு அழித்தொழித்து விட்டு அடுத்த காரியமாற்றும் நிலையில் இருக்கின்றது. இந்தப் பயங்கரமான சூழலை எதிர்கொள்ளவும், அதனை உடைத்தெறிந்து தனது வேணவாவை தமிழினம்

05




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புத்தாண்டுச் சிறப்பு

இயற்கையோடு இயைந்து வாழ்பவர்கள் தமிழர்கள்.

அவர்களின கொண்டாட்டங்களும் அப்படியே, இயற்கையோடு இயைந்தவை. இயற்கை விஞ்ஞானத்தோடு பிணைந்தவை.

தைத் திங்கள் முதல் நாளைத் தைப்பொங்கலாகக் கொண்டாடும் தமிழர்கள், சித்திரை முதல் நாளை ஆண்டுப் பிறப்பாக ஏற்றி மகிழ்கின்றனர். அவை எல்லாம் விஞ்ஞானபூர்வமான அடிப்படைகளில் அமைந்தவைதான்.

இயற்கையின் சூட்சுமத்தை – நுணுக்கத்தை – நுட்பத்தை – பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கனகச்சிதமாக அறிந்திருந்தமையால்தான் தைத்திங்களையும் சித்திரை புத்தாண்டு தினத்தையும் அவர்கள் கொண்டாட்டத்திற்குரிய நாள்களாக வகுத்துக் கொண்டனர்.

உலக இயக்கத்தின் முழு முதல் காரணன் சூரியன். அவனே பூமி உட்பட்ட சூரியக் குடும்பத்தின் தலைமகன். அகில நாயகனான ஆதவனே பூமிப் பந்தை இயக்குபவன். அவனே உலகுக்கு உயிரூட்டுபவன். அவனின்றி அசையாது அவனி.

காலங்கள் மாறுவதும், பருவ நிலைகள் ஏற்படுவதும், இரவு – பகல் நேர்வதும் கூட அவனால்தான். உயிர்ப்பின் மூலமும், அந்த உயிர்ப்பின் இயக்கமும் கூட அவனிலிருந்து வந்தவைதான்.

அந்த உண்மையின் அடிப்படையில் எழுந்தவைதான் தைப் பொங்கலும் சித்திரைப் புதுவருடமும்.

கதிரவன் தனது கதிர்கள் மூலம் பூமிப் பந்தெங்கும் சக்தியை வாரி இறைக்கின்றான். இது சதா காலமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்படி இறைக்கப்படும் சக்தியை பூமிப்பந்தில் பதிப்பவை தாவரங்கள். இந்தத் தாவரங்கள் மூலம் பதிக்கப்படும் சக்தியே விளைச்சல் ஊடாக ஏனைய உயிரினங்களுக்கும் மானுட இனத்துக்கும் கிட்டுகின்றது.

அவ்வாறு விளைச்சல் கிட்டும் முதல் தினத்தையே தைப்பொங்கல் தினமாகத் தீர்மானித்தான் தமிழன்.

அதேபோன்றுதான் காலக்காரணனான சூரியனை வைத்து காலத்தை வகுத்தான் தமிழன்.

தமிழரின் கால வகுத்தல் சூரியனை மையமாகக் கொண்டு அமைகின்றது. அதனால் தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன.

தமிழரின் காலப் பிறப்பு, நாளில் இருந்து தொடங்குகின்றது. ஒரு நாளை ஆறு சிறு பொழுதுகளாகவும், ஒரு வருடத்தை ஆறு பெரும் பொழுதுகளாகவும் அவர்கள் வகுத்தனர்.

வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, சாமம் என்று நாளை ஆறாக வகுத்தனர்.

அதேபோல வருடத்தையும் இளவேனில் (சித்திரை, வைகாசி), முதுவேனில் (ஆனி, ஆடி), கார் (ஆவணி, புரட்டாதி), கூதிர் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனி ( மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி) என ஆறு பொழுதுகளாகப் பங்கிட்டனர்.

ஒரு தினத்தை அறுபது நாழிகளாக வகுத்தனர். ஒவ்வொரு நாழிகையும் 24 நிமிடங்கள். அறுபது நாழிகை சேர்ந்து 24 மணி நேரம் கொண்ட ஒரு நாள்.

தமிழ்க் காலக் கணக்கில் அறுபது வருட ஒழுங்கு முறையும் உள்ளது. ஒவ்வொரு வருடத்துக்கும் ஒவ்வொரு பெயர். இன்று பிறந்தது 'பிலவ' வருடம். அறுபது வருட வரிசையில் இது 35 ஆவது வருடம்.

இப்படி வருடங்களின் எண்ணிக்கையை அறுபதாகத் தமிழர் வகுத்தமைக்கும் விஞ்ஞானக் காரணம் உண்டு. அது கோள்களின் நகர்வின் அடிப்படையில் அமைந்தது.

சூரியனில் இருந்து பூமியின் நகர்வை ஒட்டி காலங்களை வகுத்த தமிழர்கள், சூரியனை ஒட்டி ஏனைய கிரகங்களின் நகர்வை ஒப்பிட்டு, அறுபது வருட சுற்றுவட்டச் சட்டத்தை ஏற்படுத்தினர்.

நமது சூரியக் குடும்பத்தின் கோள்களில் முக்கியமானவை வியாழனும், சனியும். சூரியனை ஒரு முறை சுற்ற சனி 30 வருடங்களும், வியாழன் 12 வருடங்களும் எடுத்துக் கொள்ளும். அதேசமயம் பூமி ஒரு வருடம் எடுத்துக் கொள்ளும்.

இதன்படி பார்த்தால், சூரியனுடன் வியாழன், சனி, பூமி ஆகியன அறுபது வருடங்களுக்கு ஒரு முறையே மீண்டும் ஒரு முக நிலைக்கு வரும். அந்த அறுபது வருடங்களையே வருடச் சக்கரத்துக்கு அடிப்படையாக்கினார்கள் தமிழர்கள்.

இந்தக் கால வகுமானத்தின் அடிப்படையில் இளவேனிலின் சித்திரையில், மேஷ ராசியில் சூரியன் பிரவேசிக்கையில் புதுவருடத்தை தமிழர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இந்த நாட்டின் மற்றொரு இனமான – பெரும்பான்மையினரான – சிங்களவர்களும் இதே காலத்தில் புதுவருடத்தைக் கொண்டாடுகின்றமை சிறப்பானது.

இந்த நாட்டின் இருபெரும் தேசிய இனங்களும் புத்தாண்டை ஒன்றித்துக்கொண்டாடிமகிழ்வதுபோல, அரசாட்சியையும்ஒன்றிணைந்து பகிர்ந்து முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டுமாயின் அதுவே சிறப்பு.

அது இன்றைய நிலையில் பகல்கனவு என்பதே இந்த நாட்டின் துரதிஷ்டம்.

# நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டு மீட்கப்படும்

## பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு, ஏப்ரல் 14

கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் இந்த நேரத்தில் புத்துயிர் பெறுவதற்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் செல்லும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொரோனா தொற்று அதிகரித்தபோதும் இலங்கையின் பொருளாதாரம், 2021 ஆம் ஆண்டில் மீட்டெடுக்கப்படும் என உலக வங்கி கூறியுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலாத்துறை மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மெதுவான உலகளாவிய மீட்சி, தொடர்ச்சியான வர்த்தக கட்டுப்பாடுகள், பொருளாதார வடுக்கள் மற்றும் அதிக கடன் சுமை ஆகியவை தொடர்ந்து வளர்ச்சியை பாதிக்கக்கூடும் என்றும் உலக வங்கி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும் பணி இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு, ஏப்ரல் 14

தமிழ், சிங்கள் சித்திரை புத்தாண்டு காலப் பகுதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் பணி நேற்று (செவ்வாய்க்கிழமை) இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

அதன்படி, சமுர்த்தி பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர், முதியோர் கொடுப்பனவுகளை பெறுவோர், அங்கவீன கொடுப்பனவை பெறுவோர், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

இதன் கீழ் இதுவரையில் 12 லட்சத்து 33 ஆயிரத்து 55 பேருக்கு இந்தக் கொடுப்பனவு வழக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக கொழும்பு மாவட்டத்தில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை', குருநாகல், கிளிநொச்சி, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

அத்தோடு, மொனராகலை, பொலன்னறுவை மாவட்டங்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமதி இலங்கை அழகி தெரிவு தொடர்பிலும் அரசியல் தலையீடு

## ஹரீன் புதுக் கதை

உலகில் முதல் பெண் பிரதமரை தெரிவு செய்த நாடு என்ற பெருமையைக் கொண்டு பிரபலமடைந்த இலங்கை இன்று திருமதி உலக அழகி மற்றும் திருமதி இலங்கை அழகிகளால் நகைப்பிற்குள்ளாகும் வகையில் பிரபலமடைந்திருக்கிறது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன்பெர்னாண்டோ இந்த சம்பவத்திலும் முழுமையான அரசியல் தலையீடு காணப்படுவதாக புதிய தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் பல முக்கிய சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. அதன் மூலம் சுயாதீன பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பன ஸ்தாபிக்கப்பட்டன.

சட்டத்துடன் தொடர்புடைய விடயங்களிலும் ஏனைய விடயங்களிலும் எந்தவோர் அரசியல் தலையீடும் காணப்படவில்லை. – என்றார்.

# தலா ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு யாழில் அறுபது வீதம் விநியோகம்

## 85 ஆயிரம் குடும்பங்கள் பெற்றன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிணகளிலும் வழங்கப்படும் சமூக நலக் கொடுப்பனவு நடவடிக்கையில் ஒரு லட் சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்களில் இதுவரை 85 ஆயிரம் குடும்பங்க ளுக்கான - தலா ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு - வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ்,சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கொவிட் - 19 நெருக்கடியால் பாதிப்பிற்கு உள்ளான - குறைந்த வருமானம் பெறும் - குடும்பங்களுக்கான சமூக நல கொடுப்பனவு வழங்கும் பணி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் குடும்பம், குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பம், முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், அங்கவீனக் கொடுப்பனவு, சிறுநீரக நோய் காரணமாக கொடுப்ப னவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் என ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் இக் கொடுப்பனவிற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றும் இன்றும் இக் கொடுப்பன வின் பெரும்பகுதியைவழங்கவேஎதிர்பார்க்கப்பட்டு நேற்றும் இன்றும் 60 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று மாலை வரையில் கொடுப் பனவு வழங்கப்படும். நாளை புதுவருடம் விடுமுறை தினம் என்பதனால் வழங்கும் பணிகள் இடம் பெற மாட்டா. இந் நிதியை பெற்றுக்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# 600 ஐத் தாண்டிய கொரோனா காவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600 ஐத் தாண்டியுள்ளது. இறுதியாக 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதான ஆண் ஒருவரும், அக்குரஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதான பெண் ஒருவரும், நாரஹேன் பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதான பெண் ஒருவரும், காலி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண் ணிக்கை 602 ஆக அதிகரித்துள்ளது என அரச திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்திரைப் புத்தாண்டு பிறப்பை ஒட்டி காலைக்கதிர் ஊழியர்களுக்கு இன்று விடுமுறை. அதனால் காலைக்கதிர் நாளிதழின் இன்றைய மாலை இதழும், நாளைய காலை இதழும் மட்டுப்படுத்தப்பட்ட பக்கங்களுடன் இணைய இதழாக வெளிவரும். நாளை காலையில் மட்டும் காலைக்கதிர் நாளிதழின் அச்சுப் பதிப்பு வெளிவராது.**

**-நிர்வாகம் -**

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் புதுடில்லி செல்கின்றார் என்ற செய்தி கொழும்பில் கசிந்து ஊடகங்களில் வெளியானது. என்ன, ஏது என்று தேடிப் பார்த்தேன். அந்தச் செய்தி கசியவில்லை. வேண்டுமென்றே சில வட்டாரங்களில் கசிய விடப்பட்டிருக்கின்றது என்று தெரியவந்தது.

இலங்கைக்குக் கடனை வாரி இறைத்தே, இலங்கையைக் கடனாளியாக்கியே தனது காலில் அடிமைகளாக விழ வைக்கும் தந்திரோபாயத்தை சீனா கனகச்சிதமாக நிறைவேற்றி வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வைத்து ஒரு சில தினங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட கடன் ஒப்பந்தப்படி இலங்கைக்கு ஐம்பது கோடி அமெரிக்க டொலரை (சுமார் பத்தாயிரம் கோடி ரூபா) கடனாக சீனா வழங்குகின்றது.

இலங்கை இப்போது கேட்டதோ எழுபது கோடி டொலர் கடன். வழங்கப்பட்டதோ ஐம்பது கோடி டொலர். எஞ்சிய இருபது கோடி டொலரை (சுமார் நாலாயிரம் கோடி ரூபாவை) பெறுவதற்கான கடன் ஒப்பந்தத்தில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரில் சீனாவுக்கு வந்து ஒப்பமிட்டு கடன் உடன்பாட்டைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று பீஜிங்கில் வற்புறுத்தப்பட்டுள்ளதாம்.

அதன்படி விரைவில் சீனாவுக்குச் சென்று, கடன் ஒப்பந்தத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, மிச்சப் பணத்தையும் பெற்று வர வேண்டிய நிலைமையில் ஜனாதிபதி கோட்டாபய உள்ளார்.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான அரசியல், இராஜதந்திர, புவிசார் பனிப்போரில் இடையில் சிக்குண்டுள்ள இலங்கை, மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் போல நடந்து கொள்ளும் கட்டாயத்தில் உள்ளது.

நாட்டின் தலைவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு தலைப்பட்சமாக சீனாவுக்குப் பயணம் என்றால் கொழும்பு மீதான இந்திய அழுத்தம் வேறு விதமாகி விடும். அதையும் சமாளிப்பதற்காக புதுடில்லிக்கும் அவர் விரைவில் பயணம் என்ற செய்தி கசிய விடப்பட்டிருக்கின்றது.

இதற்கிடையில் –

சீனப் பாதுகாப்பு அமைச்சர் வேறு கொழும்பு வருகின்றார். சீனா வழங்கும் தாராளக் கடன், சீனப் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பு வருகை, இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயம் என்ற சீனப் புராணங்களைச் சமாளிக்கவே கோட்டாபயவின் புதுடில்லி 'விசிட்' பற்றிய செய்திப் பரவல் என்கின்றன கொழும்பில் செய்தி வட்டாரங்கள்.

இருதலைக்கொள்ளி எறும்பு நிலைமை போல – கத்தியில் நடப்பது போன்று – இராஜதந்திரத்தைக் கையாள வேண்டிய இக்கட்டுக்குள் ராஜபக்ஷ நிர்வாகம் சிக்கித் திணறித் தவிக்கின்றது என்பது வெளிப்படையானது.

★ ★ ★

தமிழரசு மற்றும் கூட்டமைப்புக்குள் உள்குத்து வலு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.

2010 மற்றும் 2015 பொதுத் தேர்தல்களை ஒட்டி கட்சியின் நடவடிக்கைகளைக் கையாளும் பொருட்டு தொகுதிகளைக் கையாளும் பொறுப்பு ஒவ்வொரு எம்.பிக்களிடமும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. அந்தந்தத் தொகுதிகளில் அவரவர்தான் குட்டி ராஜாக்கள். உதாரணத்துக்கு கிளிநொச்சியின் சிற்றரசன் சிறீதரனே என்ற மாதிரித்தான் கட்சியின் நிலைமை.

தத்தமது தொகுதிக்கு உட்பட்ட பிரதேச சபைகளுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்வது வரை பெரும்பாலும் அந்தச் சிற்றரசர்களிடம்தான் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இப்போது அடுத்த தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. யாழ்.மாவட்டத்தில் ஐந்து எம்.பிக்களை வைத்திருந்த கூட்டமைப்பு அவற்றில் இரண்டை இழந்து விட்டது. ஆனால் தோற்ற எம்.பிக்கள் தமக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் சிற்றரசர்களாகச் செயற்பட முயல்கின்றமையால் தான் சிக்கல்.

ஒரு முன்னாள் எம்.பியின் சொற்படி அவருக்கு உட்பட்ட பிரதேச சபையின் தலைவர் இப்போது செயற்படவில்லை. அதனால் லடாய். குழப்பம். தமது பிரதேசத்தில் நடக்கும் பொது நிகழ்வுகளுக்கு பதவியில் இருக்கும் அந்தப் பிரதேச சபைத் தலைவரை நிகழ்ச்சிகளுக்கு அழைக்கக் கூடாது என்ற கெடுபிடி வேறு.

பிரதேச சபைத் தலைவருக்குக் குடைச்சல் கொடுக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக, அந்தப் பிரதேச சபைத் தலைவருக்கு நெருக்கமான – சபையின் வயோதிப – உறுப்பினர் ஒருவரை அச்சுறுத்தி, பலவந்தமாக அவரின் இராஜினாமாக் கடிதம் பெறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதை மாவட்டத் தேர்தல் உதவி அத்தாட்சி அலுவலருக்கு அனுப்பினால் அந்த சபை உறுப்பினரின் பதவி காலி. பிறகு, மேற்படி பிரதேச சபைத் தலைவருக்குக் குடைச்சல் – தொல்லை – கொடுக்கக் கூடிய தனது ஆள் ஒருவரை உறுப்பினராக நியமிப்பது திட்டமாம்.

கடந்த வருடம் இறுதியில் சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க வைத்து அதன் மூலம் சபையின் தலைவரை வீட்டுக்கு அனுப்பும் திட்டமும் கரவாக முன்னெடுக்கப்பட்டதாம். சபை உறுப்பினர்கள் மசிந்து கொடுக்காதமையால் அந்தப் பகுதி சிற்றரசரின் முயற்சி அப்போது பலிக்கவில்லை.

அதனால், இப்போது, வட்டாரத்தில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையே இராஜினாமாச் செய்ய வைத்து, சபைத் தலைவருக்கு தொந்தரவு கொடுக்கும் திட்டம் கட்டவிழ்க்கப்பட்டிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட உறுப்பினரும், சபையின் தலைவருக்கு நெருக்கமானவர்களும், 'குய்யோ, முறையோ' என்று கட்சியின் சட்டச் சீமானிடம் சென்று முறையிட்டிருக்கின்றனர். நடந்தவற்றை எழுத்தில் தாருங்கள், பார்க்கலாம் என்றிருக்கின்றார் அவர்.

சம்பந்தப்பட்ட உறுப்பினரிடமிருந்து வல்வந்தமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட இராஜினாமாக் கடிதம் உதவித் தேர்தல் அத்தாட்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டு விட்டதா, இல்லையா என்பது தெரியவில்லை.

பாவம் கட்சித் தலைவர், தமது முதலமைச்சர் கனவுக்காக ஏங்கிக் கொண்டு அதே எண்ணமாக அவர் திரிகின்றார். இந்த உள்கட்சிச் சிலெடுப்புகளை அவதானிப்பதற்கு அவருக்கு எங்கு நேரம்....? ஏது முதுகெலும்பு...?

– மின்னல் –

---

## நம்பிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாடு தற்போதைய பாதையில் தொடர்ந்து பயணிக்க முடியாது. தற்போதைய பாதை பேராபத்து மிக்கது.

நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படக்கூடிய வகையில் தேசிய பிரச்சினையான அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த அநீதிகளுக்கு அரசு பொறுப்புக்கூறியே ஆக வேண்டும். அந்தக் கடமையிலிருந்து அரசு விலகக் கூடாது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்லுறவுகளை அரசு பேண வேண்டும். இவையெல்லாம் தவிர்க்க முடியாத கருமங்களாகும்.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கொடுத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசு இன்று தத்தளிக்கின்றது. இது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல. விசேடமாக இந்த ஆட்சிக்கு உகந்ததல்ல.

தமிழர்களாகிய நாங்கள் நாட்டைப் பிரித்துத் தருமாறு கோரவில்லை. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் போதிய அதியுச்ச அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்பட்டு எங்கள் இறைமையை நாங்கள், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் – தமிழர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் பயன்படுத்த வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கை.

உலகத்தில் பல்வேறு நாடுகளில் இவ்விதமான நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமை எமது பிரதேசங்களிலும் ஏற்பட வேண்டும் என்றே நாங்கள் கேட்கின்றோம். இதற்காக நாங்கள் கடுமையாக உழைப்போம். உழைத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது – என்றார்.

## தமிழருக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பூர்த்தி செய்யவும் இந்தச் சித்திரைப் புத்தாண்டுஎங்களுக்குவல்லமைதரவேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுத்துள்ள சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

பிலவ வருடப் பிறப்பைக் கொண்டாடும் அனைத்து உறவுகளுக்கும் அன்புரிமையுடன் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு பண்டிகைகளும் வரும் போது அவை எம் மக்களுக்கு விடிவைத் தராதா என்று ஏக்கத்துடனேயே காத்திருந்து கழிந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே இன்று தமிழினம் இருந்து வருகின்றது. ஏமாற்றங்களே தொடர் கதையாகிப்போயுள்ள சூழலில் பிறக்கின்றது பிலவ வருடம்.

கொண்டாட்டங்கள் எங்கள் வாழ்வின் ஓரங்கம். அவற்றைத் தவிர்க்க முடியாது. எங்கள் கலாசாரங்களுடன் அவை இரண்டறக் கலந்துள்ளன. விரக்தியிலிருந்தாலும் மனதிலிருக்கும் நம்பிக்கையின் தெம்புடன் இந்தப் புத்தாண்டையும் நாம் கொண்டாடுவோம் – என்றுள்ளது.

---

## கொழும்பில் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினரான (1931 ஆண்டு) அப்புத்துரை வேலுப்பிள்ளையும் அவரது குடும்பத்தினரும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் மற்றும் இந்து வாலிபர் சங்கக் கொழும்புக் கிளை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வருகின்றவர்கள் என்பதும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள தமது காணியை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கதிற்கு அவர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அப்புத்துரை வேலுப்பிள்ளை வரி மதிப்பீட்டாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

---

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை முள்ளிவாய்க்கால் பகுதியில் கப் வாகனம் மோதித்தள்ளி விபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதன் போது காயமடைந்த படைச்சிப்பாய் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தினை ஏற்படுத்திய கப் சாரதி வாகனத்தினை விட்டுதப்பிஓடியுள்ளார்.

விபத்து குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வாகனம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. வாகனத்தின் உரிமையாளரை கண்டறிந்து சாரதியைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸா ஈடுபட்டுள்ளார்கள்.

---

## யாழில் மேலும் 18...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருவில் வசிக்கும் 81 வயது பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 429 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 20 பேருக்கு தொற்றுஉள்ளமைகண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 10 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருவில் வசிக்கும் 81 வயது பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் வைத்தியசாலை சுயதனிமைப்படுத்தல் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்கள். ஒருவர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும், மன்னார் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

---

## இலங்கைக்கு வருகின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தர்ப்பம் இதுவாகும்.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் பயணம் எப்போது என்பது பற்றிய சரியான திகதி இன்னும் வெளியிடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் தமிழ் – சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் பின்னர் நிச்சயமாக சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளார் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் சீனப் பாதுகாப்பு அமைச்சர் பேச்சு நடத்த உள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சீனாவிற்கான பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

---

## முதல்வர் பதவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு இணங்கினால் அது தொடர்பில் நாமும் பரிசீலிக்கலாம் – எனப் பதில் அளித்தார்.

அதேநேரம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக் கொள்வீர்களா என்ற வினாவிற்கு பதிலளிக்கும் போது மாவை.சேனாதிராசா எனது நண்பர், ஆனால் முதலமைச்சருக்கு அவர் பொருத்தம் அற்றவர், மாவை.சேனாதிராசா முதலமைச்சருக்குப் பொருத்தமற்றவர் என்பதனாலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அன்றே என்னைத் தேர்வு செய்தார் – என்றார் விக்னேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# சிந்திக்க வைக்கும் சிறப்பான சித்திரை



கொண்டாட்டங்கள் – வாழ்விலே புத்துணர்வை ஏற்படுத்தி உற்சாகமாய் இருப்பதற்கு நல்லதொரு வழிகாட்டிகளாய் விளங்குகின்றன. ஒவ்வொரு கொண்டாட்டமும் வருகின்ற வேளை அதாவது வருவதற்கு முன்னும் வந்த நிலையிலும் வாழ்விலே ஒரு வசந்தம் வந்து அமைவதை காணமுடிகிறது. ஆனந்தம் வருகிறது! அகமகிழ்வு வருகிறது! வீடும் நாடும் விடிவு பெற்றது போல ஓர் எண்ணம் கூட உதயமாகிறது. அதனால்தான் ஆண்டுதோறும் கொண்டாட்டங்கள் அமைந்திருக்கின்றன.

மாதத்தில் கொண்டாட்டம், வருடத்தில் கொண்டாட்டம் என்று அவை வாழ்விலே நிறைந்தே இருக்கின்றன. அத்தகைய வண்ணம் சமூகக் கட்டமைப்பு வளர்ந்து வந்துள்ளது . அந்த வகையில் இன்றைய சித்திரைத் திருநாளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது பொருத்தமாய் இருக்கும்.

சித்திரைத் திருநாளைத் தமிழர் திருநாள் என்பதா? தைத் திருநாளை தமிழர் திருநாள் என்பதா? – என்று ஒரு போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டு, அரசியல் கட்சிகளின் கொள்கையாக்கப்பட்டு, அக்கட்சிகள் சார்பாக அறிஞர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தி, பெரும் சர்ச்சையினை உருவாக்கி, ஆட்சிகள் மாறும் வேளை காட்சிகள் மாறியதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனாலும் பலரும் சித்திரைத் திருநாளையே தமிழர்தம் திருநாளாகக் கொண்டாடி வருகிறார்கள். திருநாளைக் கொண்டாடுவதன் நோக்கமே மனமகிழ்வும் மனநிறைவுமேயாகும். அதனை விட்டு விட்டு அங்கும் – வீண் தர்க்கமும் குதர்க்கமும் பேசி அங்கும் ஒரு பஞ்சாயத்தை அரங்கேற்றுவதும் பொருத்தமுடையதா? சிந்தித்தால் தெளிவு வரும் அல்லவா?

சித்திரை மாதத்தின் முதல் நாளையே புத்தாண்டாக கொண்டாடி வருகிறார்கள் தமிழர்கள் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன என்று அறியக்கிடைக்கிறது. வானியலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டே சித்திரைத்திருநாள் புத்தாண்டாக மலர்ந்திருக்கிறது. பூமியானது சூரியனை ஒரு முறை சுற்றிவருவதற்கு எடுக்கும் காலம் பன்னிரெண்டு மாதங்களாகும். சூரியன் பூமத்திய ரேகையில் பிரகாசிக்கும் மாதம் ஆண்டினது தொடக்கமாகக் கருதப்படுகிறது. சூரியன் முதல் ராசியான மே ராசிக்குள் நுழைவதிலிருந்து அந்த ராசியைவிட்டு வெளி யேறும் வரையுள்ள காலமானது சித்திரை மாதமேயாகும்.

அகத்தியரின் 'பன்னீராயிரத்தில்' பங்குனி மாதத்தை கடை மாதம் என்று காட்டப்படுகிறது. சங்க இலக்கியம் தமிழர்தம் பொக்கிஷமாகும். அந்த பொக்கிஷத்திலேயே சித்திரைத் திருநாள் – புத்தாண்டு என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. 'நெடுநெல் வாடையில் 160 – 161 வரிகளில் திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக என்று நக்கீரர் பகருகின்றார். இப்பாடலில் வரும் 'ஆடுதலைக்கு' மே ராசி என்று பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலின் வாயிலாக முனைவர் மா.இராசமாணிக்கனார் தெளிவுபடுத்துகிறார். தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை என்று மலைபடுகடாம் என்னும் சங்கப்பாட்டு காட்டுகிறது. அதாவது – பங்குனி மாதத்தின் கடைசி சித்திரை மாதத்தின் முதல் நாளிலேதான் வேங்கை மரங்கள் வழக்கமாகப் பூக்கும் என்பது இதன் பொருளாகும். அதுமட்டுமல்ல கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால் என பழமொழி நானூறு சுட்டிக் காட்டுவதால் – இளவேனில் காலத்தின் துவக்கமானது சித்திரையே என்பதும் அதுவே தலைநாளாக மிளிர்ந்தது என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

சீவகசிந்தாமணியிலும் கோடை காலமே முதலாவது பருவம் என்று சுட்டுவதும் நோக்கத்தக்கதே. மேலும் 'புஷ்பவிதி' என்னும் நூலிலே சித்திரை முதல் மாதமே என்று கமலை ஞானப் பிரகாசரும் விளக்கம் அளித்துள்ளமையும் கருத்திருத்த வேண்டியது.

சூரியனின் சுழற்சியை வைத்துத்தான் புத்தாண்டைக் கணக்கிடலாம். அப்படித்தான் கணக்கிடப்பட்டும் வருகிறது. அதனால்தான் சித்திரைத் திருநாள் புத்தாண்டாய் மலர்கிறது. தைமாதம் என்பது மகர ராசியில் வருகிறது. மகர ராசி என்பது வானிலைப்படி, பஞ்சாங்கப்படி பத்தாவது ராசியாகும். பத்தாவது ராசியில் வரும் தை எப்படி புத்தாண்டாய் அமைய முடியும்? மேஷ ராசிதான் முதலாவது ராசி என்பதற்கே ஆதாரங்கள் இருப்பதாலும் அதனையே இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துவதாலும் மேஷத்தில் சூரியன் நுழையும் காலமாக சித்திரையே பொருந்தி வருவதாலும் புத்தாண்டி னைச் சித்திரையில் கொண்டாடி வருவதே வரன் முறையாக இருக்கிறது என்பது சித்திரைத் திருநாள் கொண்டாடி மகிழும் வேளை யாவரும் மனமிருத்தல் நல்லது என்று கருதுகிறேன்.

இளவேனில் காலத்தித்தான் சித்திரையே ஆரம்பிக்கின்றது. இதனையே வசந்தகாலம் என்று அழைக்கின்றனர். வசந்த காலத்தில்தான் மாமரங்களில் மாந்தளிர்களும் மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. வேப்பமரங்களிலும் வேப்பம் பூக்களும் பூத்துக் குலுங்குகின்றன. மாமரங்கள் பூத்துக் குலுங்கினால் நல்ல சுவையான மாங்கனிகள் கிடைக் கும். சுவைத்தால் இன்பமே பெருகும். வேம்பின் குணமோ கசப்பு. வேம்பம் பூவின் நிலையும் கசப்புத்தான். கசப்பான வேம்பும், இனிப்பான மாவும் ஜொலிக்கும் காலம்தான் சித்திரைத் திருநாள். அதாவது இனிப்பும் கசப்பும் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை என்பதை இயற்கையே உணர்த்தி பாடம் நடத்தும் காலம்தான் புத்தாண்டாய் வரவிருக்கும் சித்திரைத் திருநாள்.

சித்திரை என்று நினைத்தாலே பெரும் எதிர்பார்ப்புகள் வந்தே நிற்கும். பங்குனிபோய் சித்திரை வந்தால் பத்திரிகை வந்திடும், கல்யாணப் பத்திரிகை வந்திடும் என்று ஒரு பாட்டும் பிரபல்யமாய் ஒலிப்பதைக் கேட்டிருக்கிறோம். அப்படி என்றால் – சித்திரை என்பது வாழ்வில் நல் முத்திரை பதிக்க வரப் போகிறது என்பதுதானே அர்த்தம்! சித்திரைத் திருநாள் தமிழர்தம் உள்ளங்களில் உவகையினை ஏற்படுத்தும் நாளாகவே அமைகிறது.

புத்தாடை வாங்குவது,விதம்விதமாய் பலகாரங்கள் செய்வது, பட்டாசு மத்தாப்பு என்று வாங்கிக் குவிப்பது, வீட்டுக்கு வெள்ளை அடிப்பது, வீட்டை அழகுபடுத்துவது, ஒரே கல கலப்புத்தான்

சித்திரைப் புதுவருடம் என்றவுடன் மருத்துநீர் முன் வந்து நிற்கும். மருத்துநீர் என்பது மருத்துவத்தின் ஒரு பங்களிப்பே எனலாம். தமிழர்கள் எதைச் செய்தாலும் அதற்குள் மருத்துவத்தையும் இணைத்தே விடுவார்கள். இது தமிழர்களின் அத்தனை கொண்டாங்களிலும் ஒட்டிக் கொண்டே இருக்கும்.

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி, சுக்கு, இவற்றை நீரிலை கலந்து காய்ச்சி எடுப்பதுதான் 'மருத்து நீர்' என்னும் சித்திரைத் திருநாள் விஷேட மருத்துவம் ஆகும். இந்த மருத்துநீரை அனைவரும் தலையில் வைத்து பின்னர் நீராடுதல் என்பது அவசியமானதாகச் சொல்லப்பட்டு பெரும்பாலும் அனைவருமே செய்து வருகின்றனர். கொண்டாட்டம் என்றாலும் அதிலும் ஆரோக்கியத்தை அடிப்படையாக வைத்திருப்பது கவனத்துக்குரியது அல்லவா?

மருத்துநீர் வைத்து நீராடிய பின்னர் வாங்கிய புத்தாடைகளை அணிவது மரபாக இருந்து வருகிறது. புத்தாடை அணிந்து கோவில் சென்று தரிசனம் செய்து பெரியவரிடம் ஆசி பெற்று பலவகையான பட்சணங்களை உண்டு மகிழ்வதும் வழமையாக இருக்கிறது.

பெரியவர்களிடம் ஆசிபெறுவது, கைவிசேசம் வாங்குவது சித்திரைப் புத்தாண்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பெரியவர்களின் வாழ்த்து என்றுமே துணை நிற்கும் என்பதும் அவர்களிடம் பெறும் கைவிசிஷேசம் அந்த ஆண்டு முழுவதிலும் இலட்சுமி கடாட்சமாய் ஜொலிக்கும் என்பதும் மனத்தில் பதியும் அசையாத நம்பிக்கை. கோவில்களில் திருவிழாக்கள் இக்காலத்தில் சிறப் பாக இடம் பெறும். பெரும்பாலும் அனைவருமே கோவில் வழிபாட்டை தவறாமல் பயபக்தியுடன் செய்திடத் தவறவே மாட்டார்கள்.

கலைவிழாக்களுக்குக் குறைவிருக்காது. விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடை பெறும். கிழகிலங்கைப் பகுதிகளில் ஊஞ்சல் கட்டி அதில் சிறியவர் முதல் பெரியவர்வரை அமர்ந்து ஆடிப்பாடி மகிழ்வது சித்திரைத் திருநாளில் பெரிய தொரு விசேசமாய் நடந்து கொண்டே இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலை இல்லை என்றே சொல்லாம். கிழக்கிலங்கையில் சில பகுதிகளில் புத்தாடை வாங்கினால் முதலில் அதனை வீட்டிலிருக்கும் தென்னைக்கு கட்டி அதன் பின்னே அவர்கள் தாங்கள் கட்டிக் கொள்ளும் வழமையும் இருந்து வருகிறது. ஆனால் இம்முறை யாழ்ப்பா ணப் பகுதியில் இல்லை.

அச்சு முறுக்கு, சீனிப்பணியாரம், பயத்தம் பணியாரம், கிழக்கிலங்கையில் சித்திரையில் அதிகமாக எல்லா வீடுகளிலுமே செய்வார்கள். யாழ்ப்பாணத்தில் இவை எல்லாம் செய்தாலும் அவர்கள் தங்களுக்கென்று சிறப்பான பலவற்றையும் செய்து பகிர்ந்துண்டு மகிழ்வார்கள்.

உறவுகள் ஒன்று சேர்வது , உணவுகளில் அறுசுவை சேர்ப்பது, பக்கத்து வீட்டாருக்குப் பகிர்ந்து மகிழ்வது, வறுமையில் இருப்பார்க்கு இயன்றவற்றைக் கொடுத்து அவர்களையும் மகிழ்விப்பது, இயன்றவரை தான தர்மம் செய்வது சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் முக்கியமான பண்பாடு.



இலங்கையில் சித்திரைப் புத்தாண்டினை சிங்கள பௌத்தர்களும் கொண்டாடி மகிழ்கிறார்கள் என்பதும் அரசாங்க பொதுவிடுமுறை தினமாக இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கவை. தமிழர்கள் பலவித பலகாரங்கள் செய்வார்கள். ஆனால் சிங்கள பௌத்தர்கள் பாற்சோறு வைத்துப் பரிமாறி மகிழ்வார்கள். அவர்களும் பெரியவர்களிடம் வெற்றிலையில் கைவிசேசம் பெற்று ஆசியும் பெறுவார்கள். ஆளும் இனமும் ஆளப்படும் இனமும் கொண்டாடி மகிழும் கொண்டாட்டமாய் சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் விளங்குகிறது.

இந்தியாவில் அடங்கியிருந்த கொரோனா மீண்டும் தலைவிரித்து நிற்கிறது. அங்கும் சித்திரையைக் கொண்டாட விரும்பினாலும் நிலைமை சீரடையுமா என்பது கேள்வியாய் எழுந்து நிற்கிறது. சிங்கப்பூர், மலேசியா தமிழர்களும் சித்திரைத் திருநாளைக் கொண்டாடக் காத்திருக்கிறார்கள். ஆனால் அங்கும் இன்னும் சீனாவின் சீதனம் சிக்கலாய் நிற்கிறது !

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற தமிழர்களும் சித்திரையில் என்ன செய்யலாம் என்று சிந்தித்த வண்ணமே இருக்கிறார்கள். ஆனால் சித்திரையோ பக்கத்தில் வந்து நிற்கிறது.

கொரோனா என்னும் அரக்கன் தனது கோரப்பிடியை விட்டபாடில்லை. கொண்டாட்டங்கள் அனைத்துமே பெருந் திண்டாட்டமாய் ஆகிவிட்டன. .இதில் சித்திரை வந்தால் என்ன? வராவிட்டால்த்தான் என்ன? – என்னும் அளவுக்கு மக்கள் மனமெல்லாம் பயமென்னும் இருளே செறிந்து காணப்படுகிறது. என்றாலும் சித்திரை என்றவுடன் நித்திரையே பறக்கிறது. எப்படியும் கொண்டாடி மகிழ வேண்டும் என்னும் ஆவலை மட்டும் அடக்கிவிடவே முடியவில்லை. கொண்டாடுவோம் – ஆனால் அடக்கமாய், ஆன்மீகமாய், கொண்டாடி அகநிறைவினை அடைவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வளமான நாட்டை நோக்கி நாம் புதிய பாதையில் பயணிக்கும் நேரம்

## புத்தாண்டு குறித்து பிரதமர் செய்தி



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அனைத்து இலங்கையர்களினதும் புதிய எதிர்பார்ப்புகள் நிறைவேறும் தமிழ் – சிங்கள புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன்.

நம் நாட்டு மக்கள் பழங்காலத்திலிருந்தே பழங்கால பழக்கவழக்கங்களுக்கும் மரபுகளுக்கும் முன்னுரிமை அளித்து, விழாக்களை கொண்டாடி வருகின்றனர்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுடன் பின்னிப்பிணைந்திருக்கும் கலாசார ரீதியாக மதிப்புமிக்க சமூக நடைமுறைகள் இந்த தமிழ் – சிங்களப் புத்தாண்டின் மூலம் நினைவு கூரப்படுகின்றது.

அரசாங்கம் வழங்கிய சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி, ஒழுக்கமான மக்கள் என்ற வகையில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புகள் காரணமாக, இப்புத்தாண்டை இந்த அளவிற்கேனும் சுதந்திரமாக கொண்டாட வாய்ப்பு கிடைத்துள்ளது.

எனவே, சுகாதார நடைமுறைகளை மனதில் கொண்டு நமது கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

மக்கள் மீது சுமத்தப்படும் சுமையை அரசாங்கம் பொறுப்பேற்று, அனைத்து மக்களின் எதிர்காலத்தையும் வளமாக்க அரசாங்கம் செயல்படுகின்றது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

புதிய சிந்தனைகள் மற்றும் அபிலாஷைகளுடன் நாம் எதிர்கொள்ளும் சவால்களை கவனத்திற்கொண்டு, ஒரு வளமான நாட்டை நோக்கிய ஒரு புதிய பாதையில் பயணிக்க வேண்டிய நேரம் எழுந்துள்ளது.

அதற்கு நம் ஒருவருக்கொருவர் இடையில் காணப்படும் உறவை வலுப்படுத்தி, இலங்கை தேசம் என்ற ரீதியில் உலகின் முன்னிலையில் புதிய வீரியத்துடன் உயர்ந்து நிற்பதற்கு இப்புத்தாண்டில் நாம் அனைவரும் உறுதி கொள்வோம்.

இப்புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்த வளமான ஆண்டாக அமைய வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

# சுகாதார வழிகாட்டல் பிரகாரம் புதுவருடம் கொண்டாடுவோம்!

## யாழ் அரச அதிபர் அழைப்பு



யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமான க.மகேசன் தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

பிலவ வருட தமிழ் புத்தாண்டை கொண்டாடும் சகல மக்களுக்கும் இப்புத்தாண்டு நல்ல ஆரோக்கியத்தையும், சுபீட்சத்தையும் மற்றும் சௌபாக்கியங்களையும் வழங்கி மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு வழியேற்படுத்த எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் இந்த கொவிட்19 தொற்றுச்சூழ்நிலையில் சகல பொதுமக்களும் அவசியமற்ற நடமாட்டங்களையும் ஒன்றுகூடல்களையும் தவிர்த்து, சுகாதார வழிகாட்டல்களுக்கிணங்க சமூக இடைவெளி பேணி, முகக் கவசம் அணிந்து, தங்களையும் தங்கள் குடும்ப உறவுகளையும் பாதுகாப்பது ஊடாக தொற்றிலிருந்து சமூகத்தை பாதுகாக்க மேலான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள். – என்று உள்ளது.



# அரசியல் உரிமையும், அபிவிருத்தியும் இணைந்த மக்களின் இலட்சியக் கனவுகள் ஈடேற வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புத்தாண்டுச் செய்தி



பிறந்திருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டின் வரவில் சகல மக்களின் மனங்கள் தோறும், வரலாற்று வாழ்விடங்கள் தோறும் புது மகிழ்வு பூக்கட்டும் என கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நான் கூறும் எமது மக்களின் புது மகிழ்வென்பது தத்தமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் சகல மக்களும் சரிநிகர் சமன் என்ற சமத்துவ உரிமைகளோடு தலை நிமிர்வுடன் வாழ்வதேயாகும்.

அரசியலுரிமை, அபிவிருத்தி, அன்றாட வாழ்வியல் உரிமை என எமது மகள் விரும்பும் எழிலார்ந்த வாழ்வை உருவாக்க சகல அரசியல் தலைமைகளும், சிவில் சமூக அமைப்புகளும் யதார்த்த பூர்வமான செயல் முறைக்கு முன்வர வேண்டும்.

அரசியலுரிமை என ஒரு புறமும், அபிவிருத்தி என இன்னொரு புறமும் மட்டற்ற வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வழங்குவதால் எமது மக்கள் தொடர்ந்தும் திக்கற்று நிற்கும் துயர் நிலையே நீடித்து வருகிறது.

ஆகவே,எமதிரு கண்களாக விளங்கும் அரசியலுரிமையும், அபிவிருத்தியும் இணைந்த எமது மக்களின் இலட்சியக் கனவுகள் ஈடேற வேண்டும். எமது மக்களின் சகல இழப்புகளுக்குமான பரிகாரம் தேடும் துயர் துடைப்புகள் துரிதமாக நிகழ வேண்டும். வறுமையற்ற வாழ்வு நோக்கி நிமிர்ந்தெழுந்து சகல மக்களும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடும் சூழல் நிலவ வேண்டும்.

சமகால சூழலில் சரியான திசைவழி நோக்கிப் பயணிப்பதன் ஊடாக எமது மக்கள் எண்ணிய எதிர்கால இலட்சியங்களை எட்டிவிட முடியும். இந்த ஆழ்மன நம்பிக்கையோடு சித்திரைப் புத்தாண்டை கொண்டாடி மகிழும் சகல மக்களுக்கும் எனது அறிவார்ந்த வழிகாட்டலுடன் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

தேசிய நல்லிணக்க சிந்தனை செயற்பாடுகளை சகல தரப்பு மக்களும் பலப்படுத்துவதே ஒளி வீசும் உயரிய வாழ்விற்கு உரமிடும். – என்று மேலும் தெரிவித்துள்ளார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிலவ வருடப்பிறப்பு சுப அனுஷ்டானங்கள்

கலியுகாதி சுத்ததினம் 1870852, நாடி 45 விநாடி 51, தற்பரை 15க்குச் சரியான சார்வரி வருட பங்குனி மீ 31 உ (14.04.2021) செவ்வாய்க்கிழமை பின்னிரவு நாடி 48 விநாடி 51 (மணி 1.39)இல் பூர்வ பக்கத் துதியைத் திதியில் பரணி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் பிரீதி நாமயோகத்தில், கௌலவக் கரணத்தில், மகர லக்கினத்தில், இடப நவாம்சத்தில், சனி காலவோரையில், சந்திரன் சூக்கும வோரையில், தாமத குணவேளையில் நட்சத்திரப் பக்ஷியாகிய வல்லூறு உண்டித் தொழிலும் சூக்கும பக்ஷி உண்டித் தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புதிய பிலவ வருடம் பிறக்கின்றது.

### விஷு புண்ணிய காலம்

முன்னிரவு நாடி 38 விநாடி 51 (மணி 9.39), (13.04.2021; 9.39 pm) முதல் அன்று பின்னிரவு நாடி 58 விநாடி 51 (மணி 5.39) (14.04.2021; 5.39 pm) வரை விஷு புண்ணிய காலமாகும்.

### ஸ்நான முறை

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து, மருத்துநீர் தேய்த்து, சிரசில் விளா இலையும் காலில் கடம்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

### ஆடைகள்

நீலம், சிவப்பு நிறமுள்ள பட்டாடையிலும் நீலம், சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் அணிய வேண்டும்.

### உண்டிகள்

அறுசுவை உணவுடன் பொரிக்கறி, கசப்பு என்பவை சேர்ந்தருந்த வேண்டும்.

### தோஷ நட்சத்திரங்கள்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் கால், பூரம், உத்தரம் 2, 3, 4ஆம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2ஆம் கால்கள், பூராடம் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தானதருமங்களைச் செய்து சங்கிரம தொத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

### கைவிசேட நேரங்கள்

| | |
|---|---|
| 14.04.2021 – | காலை 9.09 – 9.52 வரை |
| 14.04.2021 – | பிற்பகல் 2.22 – 4.11 வரை |
| 17.04.2021 – | அதிகாலை 4.16 – 5.07 வரை |
| 17.04.2021 – | காலை 7.49 – 9.00 வரை |
| 17.04.2021 – | பிற்பகல் 3.04 – 3.59 வரை |

### ஆதாய விரய பலன்

| இராசி | ஆதாயம் | விரயம் | பலன் |
|---|---|---|---|
| மேடம் | 08 | 14 | நஷ்டம் |
| இடபம் | 02 | 08 | நஷ்டம் |
| மிதுனம் | 05 | 05 | சமசுகம் |
| கடகம் | 05 | 11 | நஷ்டம் |
| சிம்மம் | 02 | 14 | பெருநஷ்டம் |
| கன்னி | 05 | 05 | சமசுகம் |
| துலாம் | 02 | 08 | நஷ்டம் |
| விருச்சிகம் | 08 | 14 | நஷ்டம் |
| தனுசு | 11 | 05 | அதிகலாபம் |
| மகரம் | 14 | 14 | சமசுகம் |
| கும்பம் | 14 | 14 | சமசுகம் |
| மீனம் | 11 | 05 | அதிகலாபம் |

# பிலவ வருடம் 2021 தமிழ் புத்தாண்டு

## கிரக நிலைப்படி பொதுப் பலன்கள்



இன்று ஏப்ரல் 14ஆம் திகதி தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. தமிழ் ஆண்டுகளின் வரிசைப்படி 'பிலவ' வருடம் தொடங்குகிறது. அடுத்த ஒரு வருடம் பிலவ வருடப்படி எப்படிப்பட்ட பலனை மக்கள் பெறப் போகின்றனர், விவசாயம், மழை, யார் நம்மை ஆளப்போகிறார்கள், கிரகப் பெயர்ச்சி எப்போது நடக்கும், கிரகணங்கள் எத்தனை போன்ற பல்வேறு விவரங்களைப் பார்ப்போம்.

**பிலவ வருடம் என்றால் என்ன?**

பொதுவாக தமிழ் புத்தாண்டு தினத்தில்தான் பஞ்சாங்கம் வரும். ஏனென்றால் அதுதான் சூரியனின் பயண கால ஆரம்பம். ஆத்மகாரகனான சூரியன் மேஷத்தில் உச்சம் அடைந்து தொடங்கக்கூடியது தான் புத்தாண்டு. இந்த சூரியனின் பயணம் எப்படி இருக்கிறதோ அதேபோலத்தான் மனிதர்களுடைய பயணமும், பலன்களும் இருக்கும்.

அதனால் தான் சூரியன் உச்சம் இருக்கக்கூடிய இந்த காலத்தில் தான் பஞ்சாங்கம் எழுதி இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்பதை சொல்வார்கள்.

தமிழ் ஆண்டுகள் மொத்தம் 60 உள்ளன. இந்த ஆண்டுகள் ஒரு வரிசையான சுழற்சி ஆகின்றன. அதில் 35 ஆவதாக வருவதுதான் பிலவ வருடம்.

**பிலவ ஆண்டு கிரக நிலை**

கால சக்கரத்தில் 10 ஆவதாக இருக்கு மகர ராசியில் சனி பகவான் ஆட்சி பெற்று அமர்ந்து இருக்கிறார்.

கும்பத்தில் குரு அதிசார பெயர்ச்சி பெற்று இருக்கிறார். செப்ரெம்பர் 14இல் வக்ர நிலைப் பெற்று மீண்டும் மகரத்திற்குத் திரும்புவார்.

பின்னர் நவம்பர் 20 மீண்டும் கும்ப ராசிக்கு நேர் கதியில் சாதாரண குரு பெயர்ச்சி அடைவார்.

கேது விருச்சிகத்தில் உச்சமாக இருக்கிறார். ராகு ரிபத்தில் உள்ளார்.

**ஆண்டு தொடங்கும் போது உள்ள கிரக நிலவரம்**

மேஷத்தில் சூரியன், புதன், சூரியன்; ரிஷபத்தில் ராகு; மிதுனத்தில் செவ்வாய்; விருச்சிகத்தில் கேது; மகரத்தில் ஆட்சி பெற்ற சனி; கும்பத்தில் அதிசார பெயர்ச்சி பெற்ற குரு.

**பிலவ வருட பொது பலன்கள்**

கொரோனாப் பாதிப்பு மீண்டும் அதிகரித்து வரக்கூடிய இந்த இந்த பிலவ வருடத்தில் ஜூன் மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை சற்று கவனமாக இருக்க வேண்டிய காலமாக இருக்கும்.

பெண்களுக்கு மிகவும் உகந்த ஆண்டாக இருக்கும் இந்த பிலவ வருடத்தில் திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு அவர்களுக்கு ஏற்ற வரன் விரைவில் அமையும். பெண்களுக்கான ஆரோக்கியம் அதிகரிக்கும். பிள்ளை பாக்கியம் உண்டாகும்.

பத்திரிகை, ஊடகங்களின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

பிலவ வருடம் சுக்கிர திசையில் ஆரம்பிப்பதால் இந்த ஆண்டு மழைப் பொழிவு சுமாராக இருக்கும். இதனால் விவசாயம் பெரியளவில் பாதிக்கப்படாது. இருப்பினும் சில இடங்களில் விவசாயம் பாதிக்கப்படலாம். அதே போல் கால்நடைகள் இதனால் பாதிப்புறும். பயிர் விதைப்பின் போது ஆலோசனை தேவை.

பலருக்கும் வெளிநாடு, வெளி மாநிலம் செல்ல வேண்டும் என முயல்பவர்களுக்கு அந்த ஆசை நிறைவேறும்.

சனி ஆட்சி பெற்ற வீட்டில் குரு இருக்கிறார். இதனால் தேர்தல் முடிவுகள் மக்களை சார்ந்ததாக இருக்கும்.

**ஆரோக்கியத்தில் கவனம் தேவை**

பிலவ வருடத்திற்கு ராஜாவான செவ்வாய் பகவான் வருகிறார். இதன் காரணமாக யாராக இருந்தாலும் அவர்களின் ஆரோக்கியத்தில் சற்று கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்வது அவசியம். புதுவித நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

தொழில் முன்னேற்றம் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைக்கும்.

**3 முறை குரு பெயர்ச்சி**

குருவின் பெயர்ச்சி மூன்று முறை நிகழக்கூடியதாக இருப்பதால், அதாவது தற்போது ஏப்ரல் 5 இல் மகரத்திலிருந்து கும்பத்திற்கு அதிசாரமாக சென்றிருக்கக்கூடிய குரு பகவான், செப்ரெம்பரில் மகரத்திற்கு திரும்புவார்.

நவம்பர் 13இல் மகரத்திலிருந்து முறைப்படி கும்பத்திற்கு பெயர்ச்சி ஆவார்.

பின்னர் 2022 இல் பங்குனி மாதத்தில் மீண்டும் கும்பத்திலிருந்து மீன ராசிக்கு அதிசாரமாக செல்லக்கூடும். அதனால் மூன்றும் முறை இந்த நிகழ்வு நடக்கிறது.

**பெண்களுக்கு**

பெண்களுக்கு மிகவும் ஏற்ற ஆண்டாக இந்த பிலவ வருடம் இருக்கும். அவர்களின் சொல்படி உலகம் இயங்கக்கூடிய நிலை இருக்கும். பெண்களின் முன்னேற்றம், முன்னுரிமை கிடைக்கலாம். அவர்களுக்கு உடல் நலனில் அக்கறை தேவை. தைராய்டு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. குழந்தைப் பிறப்பில் பிரச்சினை தோன்றும். உலகளவில் இந்த பிரச்சினை அதிகரிக்கும்.

இந்தாண்டு ராகு – கேது பெயர்ச்சியும், குரு பெயர்ச்சி என முக்கியத்துவம் வாய்ந்த இரு பெரிய கிரக பெயர்ச்சி நிகழும். ஆனால் சனி பெயர்ச்சி இந்தாண்டு கிடையாது.

**கிரகணங்கள்**

இந்தாண்டு இரண்டு சூரிய கிரகணங்களும், இரண்டு சந்திர கிரகண நிகழ்வும் நிகழ உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகூடிய விசேட விலைக் கழிவுடன்
வர்ணத் தீந்தைகளைப் பெற்றிட...

Devika Paints
தேவிகா பெயின்ஸ்

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

asianpaints
DP
NIPPON PAINT
C.P.T. CAUSEWAY PAINTS

No.43, Pointpedro Road, Kopay Junction 021 223 2389

ஸ்ரீ சுசீலா
ஆபரண
மாளிகை
SRI SUSILA GOLD HOUSE
நவீன யுகத்திற்கான நவ நாகரீக
நகைகளின் சங்கமம்
239, பிரதானவீதி,
பருத்தித்துறை
0777210206
021 226 1003

கதிர்வேலவன்
ஹாட்வெயர்
ஹாட்வெயர் பொருட்கள் மற்றும் சீமெந்து.
கம்பி வகைகளை மொத்தமாகவும்.
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
Phoenix Pvc Pipe & Fittings,
Hayleys Agro Fertilizers
பொருட்களுக்கான யாழ் மாவட்ட ஏக
விநியோகஸ்தரும் Causeway Paint
வகைகளுக்கான விநியோகஸ்தரும்.
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
021 222 9525
077 319 3930
கண்டி வீதி, கைதடி.

யாழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஜவுளி மாளிகை
சிவகணேசன்
புடவையகம்
Sivakaneshan Textiles
எமது மண்ணில் நிலவிவரும் கொடிய நோயினால்
பயப்பீதியடைந்திருக்கும் எமது மக்கள் அதில் இருந்து
விடுபட்டு நலமே வாழ்வதற்கு பிலவ வருடப்பிறப்பு
இனிதாக அமைய எமது வாழ்த்துக்கள்
இல. 41, பெரிய கடை,
யாழ்ப்பாணம்,
021 222 2063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் மக்களின் நீதியான அபிலாசைகளை ‘பிலவ’ வருடத்திலாவது நிறைவேற்றட்டும்!

## சுரேஷ் பிறேமச்சந்திரனின் புத்தாண்டு விருப்பு



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தமது புதுவருட வாழ்த்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மலருகின்ற பிலவ வருடம் தமிழ் மக்கள் தமக்கான உரிமைகள் கிடைக்கப்பெற்று, நீதி நிலைநாட்டப்பட்டு சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டுவருவதாக அமையட்டும்.

யுத்தம் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகவும், எம்மிடம் இருந்து பறிபோன காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகவும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காகவும் தொடர்ந்து போராடும் ஒரு போராட்ட களத்தில்தான் இன்னமும் ஈழத் தமிழ் மக்கள் இருந்துவருகின்றனர். அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அடாத்தாகக் கைப்பற்றுகின்ற நடவடிக்கைகளும் இந்துக் கோயில்களை பௌத்த விகாரைகளாக மாற்றும் நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் பிறக்கப்போகும் பிலவ வருடமானது தமிழ் மக்களது குறைந்தபட்ச நலன்களையாவது பூர்த்தி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஒவ்வொரு புதுவருடத்திலும் மாற்றங்கள் ஏற்படும், தமிழ் மக்களுக்கு புதுவாழ்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்த போதிலும், மாறாக, ஆதிக்க சக்திகளின் ஆணவமும் அராஜகப் போக்குமே அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டின் சமபங்காளர்களான தமிழ் மக்கள் மற்றொரு பங்காளியின் அடிமையாக வாழ விரும்பவில்லை என்பதையும், தொடர்ந்தும் அவர்களை அடிமைப்படுத்துவது நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்ததல்ல என்பதையும், இந்த புதுவருடத்திலாவது பேரினவாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகையே ஆட்டிப்படைக்கும் கொள்ளைநோயான கொரோனா தற்பொழுது இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களையும் ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருக்கிறது. எனவே எமது மக்கள் மிகவும் அவதானமாகவும் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றியும் பாதுகாப்புடனும் மலருகின்ற புத்தாண்டை வரவேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு புதுவருடத்திலும் ஒவ்வொரு பண்டிகை காலத்திலும் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமிருந்து வருகின்ற உதட்டளவிலான வாழ்த்துகளிலிருந்து வேறுபட்டு, இந்தப் புதுவருட வாழ்த்தாவது இதயத்திலிருந்து வெளிவரவேண்டுமென்று விரும்புகிறோம்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எமது பிலவ வருட புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# ஓரணியில் தமிழ்த் தலைவர்கள் திரள மனோபலம் கிடைப்பதாக!

## சிவ சக்திகிரீவன் புதுவருட பிரார்த்தனை



யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தமது புதுவருடச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மலரும் பிலவ வருடத்தில் சகல மங்கலப் பொலிவுகளுடன் அனைவரும் வாழ எமது வழிபடுதெய்வமான சிதம்பர நடராஜ மூர்த்தியைப் பிரார்த்திப்பதோடு புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த ஆண்டில் இருந்து கொரோனா எனும் தொற்றுநோய் எம்மை ஆட்டிப்படைத்த படியே இருக்கிறது. இதிலிருந்து விடுபடுவதற்கு சுகாதார நடை முறைகளைப் பின்பற்றுவதோடு ஆத்மார்த்த பரார்த்த வழிபாடுகளை நியமம் தவறாது பேணுவதோடு திருமுறைப் பாரயணங்களை அடியவர்களோடு இணைந்து மேற் கொள்வோமாக.

எமது நாட்டில் தீர்க்கப்படாத இனப் பிரச்சினைக்கு முடிவுகாணத் தமிழ்த் தலைவர்கள் வேறுபாடுகளை மறந்து ஒரே அணியில் திரள அவர்களுக்கு இறைவன் மனோ பலத்தை வழங்க வேண்டும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து வாழ்வதற்காக நடந்தவற்றை மறக்கவும் மன்னிக்கவும் எம்மை நாங்களே பயிற்றுவிப்போமாக.

இந்தப் புனித நாளில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதோடு, எம்மால் இயன்ற தர்மங்களைச் செய்வோமாக என்றும், இன்பம் பெருக, வாழும் இயல்பினைப் பெற அனைவர்க்கும் அருளினை மழை போல் சொரிய வேண்டுமென ஆடல் வல்லானை மீண்டும் ஒருகணம் பிரார்த்திக்கின்றேன்.



# சகலருக்கும் பிறக்கும் புத்தாண்டில் சுபீட்சமும், அமைதியும் கிட்டட்டும்!

## நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வாழ்த்து

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்று புதன்கிழமை வாக்கிய பஞ்சாங்கப்படி அதிகாலை 01 மணி 39 நிமிடங்களில் பூர்வபக்கத் துதியைத் திதியில் பரணி நட்சத்திரம் 2 ஆம் பாகத்தில் பிறக்கின்ற இப்பிலவ வருடம் அனைத்து மக்களுக்கும் சுபீட்சத்தையும் அமைதியையும் நல்க வேண்டும் என இறைவனை முதலில் இறைஞ்சுகின்றேன்.

எமது முன்னோர்கள் தைத் திருநாள், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளித் திருநாள் மற்றும் விசேட தினங்கள் அனைத்திலும் காலை எழுந்து ஸ்நானம் செய்து தூய ஆடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை இயற்றிய பின்னரே தமது நாளாந்தக் கடமைகளுக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதிலும் விசேடமாக ஆலய வழிபாடுகளை தமக்கு மட்டுமே உரித்தானதாகக் கொள்ளாமல் அனைத்து மக்களுக்கும் சுபீட்சம் உண்டாக வேண்டும் என பிரார்த்திக்கின்ற வழக்கத்தையும் கொண்டிருந்தனர். அதனால் அவர்களது வாழ்வு அமைதியும் சுபீட்சமும் நிறைந்ததாக அமைந்தது. அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்தார்கள். இன்று ஆலயம் தொழக் கூட நேரமற்ற நிலையில் நாம் பறந்து கொண்டிருக்கின்றோம். அதன் விளைவாக அமைதியற்ற மனநிலை, நோய் நொடிகள் விரைவாகப் பற்றிப் பிடிக்கின்ற தன்மை போன்றவை மேலோங்கியுள்ளன. எனவே கிடைப்பதை வைத்து சிறப்பாக வாழப் பழகிக் கொண்டு இந்த இனிய புதிய வருடத்தில் நாம் அனைவரும் இறை பக்தி மிக்கவர்களாக, அமைதியான வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்களாக வாழப் பழகிக் கொள்வோம். அதற்கு சூழல் இடம் கொடுக்க வேண்டும். இறைவன் தான் அதை நல்க வேண்டும். பொருள்களின் விலைகளின் ஏற்றம் மலைப்பைத் தருகின்றது. நாம் அனைவரும் முடியுமான அளவுக்கு வீட்டுத் தோட்டங்களை உருவாக்க இவ் வருடத்தில் முனைவோமாக! அனைவ ருக்கும் சுக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிட்ட பிரார்த்திக்கின்றேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பிலவ வருடத்தில் தமிழினம் விடுபடட்டும்

## ஐங்கரநேசனின் புத்தாண்டு எதிர்பார்ப்பு

தமிழினம் தைப்பொங்கல் திருநாளைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடிவரும் அதே வேளை சித்திரைப் புத்தாண்டையும் தமிழர்களின் ஓர் திருநாளாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டிருக்கிறது. பிலவ என்ற பெயருடன் பிறந்துள்ள இச்சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு கடந்த ஆண்டு மனுக் குலத்தை ஆட்டிப்படைக்கத் தொடங்கிய கொரோனாப் பெருங்கொள்ளை நோயிலிருந்து உலகம் விடுபடாத நிலையிலும், திரட்சிபெற்றுள்ள சிங்கள, பௌத்த பேரினவாதத்திலிருந்து ஈழத்தமிழினம் விடுபடாத நிலையிலும் பிறந்திருக்கிறது. பெருங்கொரோனாத் தொற்றிலிருந்தும் பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்தும் தமிழினம் விடுபடும் ஆண்டாகப் பிலவ வருடம் அமையட்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு தொடர்பாக அவர் விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

மனிதன் இப்பூமி தனக்குரியது மாத்திரமே என்ற மனித மையவாதச் சிந்தனையின் வயப்பட்டு இயற்கையின் பல்வகைமைத் தன்மையை நிராகரித்து வருகிறான். மனிதன் உயிரினங்களை அழித்தும், இயற்கை வளங்களைச் சூறையாடியும் பூமித்தாயில் ஓர் ஒட்டுண்ணியாக வாழ்வதன் விளைவாக இயற்கை தன்னைப் பேரழிவிலிருந்து காப்பாற்றி ஏனைய உயிர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கான எச்சரிக்கையே கொரோனா வைரஸின் பிரசவம் ஆகும்.

இலங்கைத் தீவில் சிங்கள, பௌத்த பேரினவாதம் பல்லினத்துவத்தை, பன்மதத்தை நிராகரித்து இலங்கையைத் தனித்த ஓர் பௌத்த, சிங்கள நாடாகக் கட்டமைத்து வருகின்றது. சிறுபான்மை இனங்களின் வாழ்விட, சமூக, மத, அரசியல் உரிமைகளை நிராகரித்துப் பேரினவாதம் கோலோச்சி வருகின்றது. இவற்றின் முற்றுகையினுள்ளேயே தமிழ் மக்களுக்குப் பிலவ வருடம் பிறந்திருக்கிறது. கொரோனாப் பெருங்கொள்ளை நோயிலிருந்து விடுபடவும், பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவும், இப் புத்தாண்டு நாளில் இயற்கை என்ற பேரிறைவனைப் பிரார்த்திப்போமாக! - என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# தனியார் தொழிற்துறையினருக்கு சிறப்பான ஓர் ஆண்டாக மலரட்டும்

## தொழிற்துறை மன்றத்தின் இயக்குநர் வாழ்த்து

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் இயக்குநர் வி.கே.விக்னேஸ் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலரும் இந்த 'பிலவ தமிழ்ப் புத்தாண்டு எம் அனைவருக்கும் சுபீட்சத்தையும், நிறைவான வாழ்க்கையினையும் வழங்க வேண்டும்.

குறிப்பாக நீண்ட கால அரசியல் அபிலாஷைகளுக்காக ஏங்குகின்ற எம் மக்களுக்கும் தன்னம்பிக்கை அளிக்கும் ஓர் ஆண்டாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பொருளாதார அபிவிருத்திக்கு முது கெலும்பாக விளங்குகின்ற தனியார், வர்த்தக மற்றும் தொழிற்துறையினருக்கு சிறப்பான ஓர் ஆண்டாகவும் அமைய வேண்டும் என பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# நெஞ்சிருக்கும் ஆசைகளை நீசெய்வாய் சித்திரையே!

சித்திரையே நீயும்  சிறப்புடனே வரவேண்டும்
இத்தரையில் யாவருமே இனியசுகம் பெறவேண்டும்
கொத்தாகப் பலியெடுத்த கோரமுடை கொடுநோயும்
திக்குத்திசை தெரியாமல் தெறித்தோடி மடியவேண்டும்!

மனவுறுதி மக்களது மனமெல்லாம் எழவேண்டும்
வாழ்வழித்த பெருநோயும் மண்விட்டகலவேண்டும்
இழந்தமுதல் தொழியெல்லாம் ஏற்றமாய் வரவேண்டும்
இதற்கெல்லாம் தீர்வுகொண்டு எழுந்துவா சித்திரையே!

பழையபடி கொண்டாட்டம் பட்சணங்கள் செய்யவேண்டும்
பலபேரும் பகிர்ந்துண்டு பட்டாசும் வெடிக்க வேண்டும்
கலகலப்பும் கையணைப்பும் களிப்புடனே வரவேண்டும்
சித்திரையே இத்தனையும் எடுத்துநீ வரவேண்டும்!

புத்தாடை வாங்கிடப் புறப்பட்டுப் போகவேண்டும்
மத்தாப்புக் கடையெங்கும் வந்துமே குவியவேண்டும்
மொத்தமுள்ள உறவெல்லாம் முழுமையாய் கூடவேண்டும்
சித்தமெலாம் மகிழ்வெய்த சித்திரையே நீவருவாய்!

இனிப்புக் கடைக்கு எல்லோரும் போகவேண்டும்
தடுக்கின்ற  தடுப்பனைத்தும்  தலைதெறித்து ஓடவேண்டும்
குடும்பங் குடும்பமாய் குதூகலமாய் போகவேண்டும்
நலந்திகழ மனம்மகிழ  நீவருவாய் சித்திரையே!

வான்வழியாய் தரைவழியாய் மனமகிழச் செல்லவேண்டும்
நாமணியும் முகக்கவசம் நாட்டைவிட்டுப் போகவேண்டும்
தேவையற்ற கட்டுப்பாடு தேசம்விட்டு அகலவேண்டும்
சென்சென்று சேர்ந்திருக்கச் செய்திடுவாய் சித்திரையே!

இணையவழி நடக்கின்ற அத்தனையும் இல்லாமல்
பழையபடி மண்டபத்தில் பக்குவமாய் நடக்கவேண்டும்
கருத்தரங்கம் பட்டிமன்றம் கலகலப்பாய் வரவேண்டும்
காத்திருக்கும் மக்களுக்குத் தீர்ப்புச்சொல்வாய் சித்திரையே!

ஆலயத்தில் விழாக்கள் அத்தனையும் வரவேண்டும்
அடியார்கள் அமைதியாய் ஆண்டவனைத் தொழவேண்டும்
நீர்நிலைகள் சென்று தீர்த்தமாடி வரவேண்டும்
நெஞ்சிருக்கும் ஆசைகளை நீசெய்வாய் சித்திரையே!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைத் தகர்த்து மக்களுக்கு புது விடியலைத் தரட்டும் புத்தாண்டு

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. வாழ்த்து



பிலவ வருடப்பிறப்பு தடைகளைத் தகர்த்து நாட்டு மக்கள் அனைவருக்கும் புது விடியலைத் தருவதாக அமைய வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார். தமது தமிழ் – சிங்கள புதுவருட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

எந்த மாதத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு சித்திரை மாதத்திற்கு உண்டு. தனிச்சிறப்பு மிக்க இம் மாதத்தில் தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து புது விடியலுக்கான பயணத்தை ஆரம்பிப்போம். தடுப்புச் சுவர்களை உடைத்தெறிந்து, அபிவிருத்தியில் புது மைல்கல்லை எட்டுவோம் எனவும் நம்புகிறேன். பிலவ வருடத்தில் நாட்டு மக்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் புது விடியல் உண்டாக வேண்டும். சவால்கள் அனைத்தையும் முறியடித்து, அபிவிருத்தியை முன்னெடுத்து, அதனூடாக நாட்டு மக்களின் வாழ்வில் ஒளியேற்ற பிலவ வருடம் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். அத்துடன் கொரோனா எனும் கொடிய நோய்த் தொற்றில் இருந்து நாட்டைக் காப்பாற்றவும் நாட்டு மக்கள் அனைவரும் இச் சந்தர்ப்பத்தில் திடசங்கற்பம் பூண வேண்டும். நாட்டு மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி தமிழ் – சிங்கள சித்திரைப் புத்தாண்டின் மகிமையை முழுமையாக அனுபவித்திட வேண்டும். பிறக்கின்ற புத்தாண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், சுபீட்சத்தையும், நோய் நொடியற்ற புது வாழ்வையும் தருவதாக அமைய வேண்டும் – என மேலும் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய நல் எண்ணங்களோடு புத்தாண்டை வரவேற்போம்!

## செஞ்சொற்செல்வர் அழைப்பு



தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக் கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சைவத்தமிழர்களின் வாழ்வில் சித்திரைப்புத்தாண்டு மிகவும் முக்கியத்துவம் நிறைந்த நாள். ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்வின் பெறுமதியை உணர்ந்து, கடவுளுக்கு நன்றி சொல்லி, தன் பணிகளைப் புனிதமாகத் தொடரும் நாள். புதுவருடம் பிறக்கும் வேளை சகல மக்களும் திருக்கோவில்களுக்குச் சென்று நன்கு வழிபாடு செய்யுங்கள். புதிய எண்ணங்களோடு புத்தாண்டை வரவேற்றுக்கொள்ளுங்கள். தாய்,தந்தை,மூத்தோர் பாதம் பணிந்து அவர்களின் ஆசியோடு அன்பாக வாழ்வதற்கு வழிதேடுங்கள். உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள். இன்றைய சூழலில் நேரில் செல்ல முடியாதவிடத்து தொலைபேசி வாயிலாக அல்லது வாழ்த்துக் கடிதங்கள் மூலமாக இனிய உறவைப் பேணுங்கள்.

புத்தாண்டு பிறக்கிறது. எம்மண்ணில் அமைதியில்லை. நிம்மதியான சூழல் இல்லை. நாம் வணங்கும் தொய்வங்களிடம் விடிவு கேட்டு அனைவரும் பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு சிறக்கப் பிராத்தியுங்கள். கோபங்களை வளர்த்துப் பயனில்லை. அன்பைப் பெருக்கி அனைவரும் ஆனந்தமாக வாழ வழிதேடுங்கள். அறம் என்றும் வெல்லும் என்ற சத்தியவாக்கை மதிப்பு கொடுத்து அனைவரும் தர்மவழியை பின்பற்றுங்கள். எல்லாம் வல்ல சிவப்பரம் பொருள் அனைவருக்கும் ஆனந்தமான வாழ்வு தரவ வாழ்த்தி நல்லாசி கூறி நிறைவு செய்கிறேன்.

# புத்தாண்டில் சகல நன்மைகளும் கிட்ட இந்துக் குருமார்கள் அமைப்பு வாழ்த்து

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி. சிவஶ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர் பிரம்மசிறீ. கா. சந்திரசேகர சர்மா ஆகியோர் விடுத்துள்ள புது வருட ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வும் நலமும் கிடைத்திட பிரார்த்தனை செய்கிறோம்.

இன்று தமிழ் வருடங்களில் 35ஆவது வருடமாக பிலவ எனும் மங்கலநாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. வாக்கிய பஞ்சாங்கபிரகாரம் அதிகாலை 01.39 மணிக்கும் திருக்கணிதபிரகாரம் அதிகாலை 02.31 கும் இது பிறக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் எமது மக்கள் மட்டுமல்லாது உலக அளவில் மக்கள் அனைவருமே பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்பட்டு வாழ்ந்த வருடமாக சென்ற வருடம் அமைந்திருந்தமை மிகவும் வேதனையான விடயம். ஆகவே பிறக்கின்ற இவ் வருடம் அனைவருக்கும் நல்லதாக அமைய வேண்டும். தேக ஆரோக்கியம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். மனித சமூகத்திற்கு நன்மை உண்டாக வேண்டும். இவ்வாறான விடயங்களை மனதில் நிறுத்தி, மங்கலகரமாக பிறக்கும் பிலவ வருடத்தில் உரிய காலத்தில் மழைவீழ்ச்சி வேண்டும், உரியவாறு தானிய விருத்தி அமைய வேண்டும், கோமாதா, விலங்கினங்கள் நோயற்று வாழவேண்டும், எமது மக்கள் மட்டுமல்லாது உலக மக்கள் அனைவரும் இன்பகரமாக இன்புற்று சுபீட்சமாக வாழ்ந்திட வேண்டும் என்று மனதார, அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் பிரார்த்தனைகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து கொள்கிறோம் அன்புடன்.



'இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க.'






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையன கழிந்து புதியன புக புதுவருடம் புத்தாக்கம் தரும்!

## கலாபூஷணம் ஸ்ரீதரன் நம்பிக்கை



ஆன்மீக எழுத்தாளரு ஆதீன சமயப் பிரசாரகருமான சிவநெறிக்கலாநிதி, தெய்வத்தமிழ் சுடர், கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் தமது புதுவருடச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்று புதுவருடப் பிறப்பு நன்னாள். இன்று புதுவருடம் பிறந்திருக்கின்றது. இப் புதுவருடத்துக்கு 'பிலவ' என்று பெயர். இப் பிலவ எனும் புத்தாண்டை நாம் வருக வருக என்று வரவேற்பதோடு எம்முடைய வாழ்க்கையில் ஒரு நல்ல மாற்றத்தைத் தந்து மகிழ்ச்சியைத் தந்தருள வேண்டுமென்று உளமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இதுவரை காலமும் நாம் பட்ட துன்ப துயரங்கள் யாவும் விலகி ஈழம் வாழ் மக்கள் அனைவருமே மங்களம் நிறைந்த நல் வாழ்விற் திளைத்திருக்க அருள் புரிய வேண்டுமென்று வேண்டுதல் செய்து மகிழ்ச்சியைத் தரவேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்றைய புத்தாண்டு முதலாக பழையன கழிந்து, புதியன புகுந்து, புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் நாம் ஒவ்வொருவரும் மற்றவர் மனம் நோகாமல் இன் சொல் பேசி, அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று திட சங்கற்பம் எடுத்து, மன உறுதியுடன் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை நினைவு கூர்ந்து, வாழத்தலைப்பட வேண்டும் என்று வண்ணை வெங்கடேசப் பெருமாளின் பொற் கமலபாதம் பணிந்து ஆசிகள் நல்கி இறும்பூதெய்துகின்றோம்.

**'என்றும் வேண்டும் புனித உள்ளன்பு ஒன்றே'**



# தமிழர் தம் வாழ்வில் புத்தூக்கம் தருவதற்கு மலரும் புத்தாண்டு!

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தமது புதுவருட வாழ்த்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்று தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இது தமிழர்கள் வாழ்வில் ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்தப் போகின்ற பொன்னான நன்னாளாகும். 'பிலவ' என்று அழைக்கப்படுகின்ற இந்த இனிய நன்னாளை நாம் வரவேற்று மகிழ்ச்சியோடு இரு கரங்கூப்பி வணங்கி வாழ்த்தி இறும்பூதெய்துகின்றோம்.

வாழ்த்தி வரவேற்று மகிழ்ச்சியோடு முகம் மலர இன்முகம் காட்டி நின்று இதயங்குளிர, சூரியனைக் கண்ட தாமரை மலர்ந்திருந்து சிரித்து நிற்பது போல அகமிக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம். இன்று முதல் பிரச்சினைகள் யாவும் தீரப்பெற்று, ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று நல் லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். அனைத்து மக்களுமே ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி சந் தோஷமாகவும் சுபீட்சமாகவும் வாழ வழி பிறக்க வேண்டுமென்று இறையருளை நாடி வேண்டி நிற்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு. - என்று உள்ளது.

# கொலுவோடு பிறக்கிறது

உலகெலாம் தவமோடு நலமாக வாழவே
கொலுவோடு பிறக்கிறது 'பிலவ' — நிலவும்
பேராசையால் பெருந்துன்பம் இனியும் வேண்டாம்
ஆரோடும் நோகாமல் வாழ்க.

கோயிலும் போதுமே கோபுரமும் போதுமே
வாயிலே கடவுளை வாழ்த்துவீர் — நோயிலும்
கொரோனா கொடுமையால் அச்சுறுத்தும்போது
சராசரியுள்ளமே கோயில்.

தேங்காய் இளநீர் தீங்கனி கொண்டுமே
பாங்காய் ஆலயம் செல்வீர் — ஆங்கிது
புதுவருடம் பூத்திட வரமிது ஈயுமே
எதுவரினும் உனக்கு வெற்றி

கண்ணப்பரின் சிவபக்தியை மெச்சிய நாம்
வெண்காட்சியாகி விட்டோமே — பண்ணார்ந்த
திருமுறை புராணமதைப் பாடாத வாய்கள்
பொருமிடும் பிலவத்திலே!

**- கே.எஸ்.சிவஞானராஜா**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சிகள் தோற்று நியாயம் புத்தாண்டில் வெற்றியீட்டும்!



## சார்ள்ஸ் நிர்மலநாதன் வாழ்த்து

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

பிறக்கும் தமிழ் சித்திரை புதுவருடத்தில் எமது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும் ஆண்டாகவும் இன்பமும் மகிழ்ச்சியும் பெருகும் புதிய ஆண்டாகவும் மலரவேண்டும்.

உலகத்தை பெரும் அச்சத்தில் ஆழ்த்திக்கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோய் மக்களை விட்டு முற்றாக அழிந்து போகவேண்டும்.

தமிழ் மக்கள் என்றும் இல்லாதவாறு தற்போது கடுமையான இராணுவ நெருக்கடிக்குள் வாழ்ந்துவரும் தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களின் நீண்ட கால நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காக தொடர்ந்தும் எனது குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கும். சூழ்ச்சிகள் தோற்று நியாயமான எமது போராட்டம் வெற்றி பெற வேண்டும். அனைவரின் வாழ்வில் மகிழ்ச்சி நிறையட்டும்! இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் .

# பிலவ புத்தாண்டில் புதுயுகம் மலர இந்துமதகுரு பீடாதிபதி அருளாசி

அனைத்துலக இந்துமதகுரு பீடாதிபதியும், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும், தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகரின் புதுவருட ஆசிச் செய்தி வருமாறு:-

அனைத்துலகிலும் தாங்கொணாத்துன்ப துயரங்களை தாராளமாகவும் ஏராளமாகவும் வழங்கி மன்பதைகளை மறக்கவொண்ணாத் துன்பச் சூழலில் சிக்கவைத்து எம்மை விட்டு 2021.04.14 அதிகாலையில் அகன்று செல்லும் சார்வரி வருடத்தை மறந்து, புதுயுகம் படைக்கவரும் பிலவ புத்தாண்டை மங்களகரமாக வரவேற்போமாக.

இப்புத்தாண்டில் எங்கும் நன்மைகள் பல்கிப்பெருகி மனவளம், உடல்வளம், நிதிவளம் செழித்து, நிம்மதியாக வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

துன்ப துயரங்கள், அரசியல் நெருக்கடிகள் அனைத்தும் நீங்கி, புதிய மனிதர்களாக தோற்றம் பெறவும், அனைத்து வளங்களும் பல்கிப் பெருகவும், விலைவாசிகள் குறைந்து கைக் கடங்கா வாழ்க்கைச் செலவு கட்டுக்குள் வரவும் எல்லாரும் எல்லாமும் பெறவும் இன்பமே சூழ வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

பிலவ வருடம் எம் எல்லோர்க்கும் நன்மை பயக்க வருவதால் அதன் பயன்கள் முழுமையாக எம்மை வந்தடைய குலதெய்வ வழிபாடு, இஷ்ட தெய்வ வழிபாடு என்பனவற்றை இந்நன்னாளில் மேற்கொண்டு பக்தியுடன் வழிபாடு செய்து, இஷ்ட சித்திகளை பெற்றுப் பயன் பெறுவோமாக!

**இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! வாழ்க! வாழியவே!**

# நன்மைகளை பரப்பிடுவாய் புத்தாண்டே

**போர் முடிந்தொரு தசாப்தம் கடந்தும்
போகும் வழி தெரியவில்லை
வேரைத் தோண்டி விளக்கம் தேடுகிறார்
வெள்ளம் வந்தபின் விழித்துப் பயனில்லை
கோரமாய்க் கர்ச்சிக்கும் கூட்டத்தின் நடுவினில்
கொள்கையால் பிளவுபடல் சாபமாகும்
தேரின் வடம்பிடிக்க தெரிவுகள் தேவையில்லை
சேர்ந்தே இழுப்பது வரமாகும்.**

**விரட்டும் கொரோனா அச்சம் தூரவிலகிட
விடியலாய்ப் பிறந்துள்ள புத்தாண்டே!
மரத்துப்போன இதயங்களில் மகிழ்வைத் தந்திடுவாய்
மண்ணில் அமைதி பொழிந்திடுவாய்
இரத்தமில்லா யுத்தம் நாளும் சூல்வதால்
இனமாய் ஒன்றுபட்டு வாழச்செல்வாய்
கரங்கள் சேர்ந்து வரமாய் அமைந்திட
புத்தாண்டே புதுவழி கொண்டுவா!**

**வாதங்களும் வம்புகளும் வாழ்வதைத் தந்திடாது
வழிந்தோன்றல்கள் வாழ்த்திட வழிசமைப்போம்
பேதங்களால் பிரிந்து வலிமை இழந்திடாது
ஓரினமாய் ஒன்று படுவோம்
வேதங்களைச் சொல்லியே விடியலைத் தொலைத்திடாது
ஒற்றுமை தந்திடவா புத்தாண்டே!
நாதமாய் ஒலிக்கின்ற சங்கொலியாய் வந்து
நன்மைகள் பரப்பிடவா புத்தாண்டே!**

**- அபிராஜன் அன்ரனி பீற்றர் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பிலவ’ பிறப்புடன் உலகெலாம் சாந்தி நிலவட்டும்!

கே.எஸ்.சிவஞானராஜா



**கொரோனாவுக்கு எதிராக பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் எவ்வாறு மனம் கொண்டு பிரார்த்தனை செய்து தாம் தம்மை வெற்றி கொண்டார்களோ அதே போல இலங்கையர்கள் அனைவரும் சமாதான சகவாழ்வுடன் சரிநிகர் சமானமாக ஒளிரவும் மிளிரவும் வளரவும் வேண்டுமென யாவரும் இப்புதிய ஆண்டில் பிரார்த்திப் போமாக.**

1841, 1901, 1961, 2021 ஆகிய நான்கு ஆண்டுகளும் ‘பிலவ’ என்ற பெயரோடு இந்தப் பூவுலகிற்கு அதிசயம் பெறும் ஆண்டுகளாகிக் கணிக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டும் சகல சமூகங்களும் சௌபாக்கியம் பெறும் ஆண்டாக மிளிரப் போகிறது.

தமிழ், சிங்களப் புத்தாண்டாக 14.04.2021 புதன்கிழமையன்று விடியற் காலையில் பிறக்கின்ற போது நாம் ஒவ்வொருவரும் வெல்லப்பட வேண்டிய பிரஜைகளாக வரம் பெறுவதற்கு இலங்கை மாதாவின் தவம் பலிக்கும் என நம்பலாம்.

நாம் அனைவரும் நீடித்த ஆயுளோடு ஆரோக்கியம், சம்பாத்தியம், சௌபாக்கியம், சமாதானம், சகோதரத்துவம், சகவாழ்வு, சந்தோஷம் சாத்தியமாக வாழ்வது என்ற குறிக்கோளுடன் தினமும் பயணிக்கின்றோம்.

மாதா,பிதா,குரு,தெய்வம் ஆகிய வழிபாடுகளோடு அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள், ஏனையவர்கள் என யாவரும் அன்னியோன்னியமாய்ப் புரிந்து அவரவர் வாழ்வினை எளிமையாகவும், சிக்கனமாகவும், கல்வியறிவோடு வாழ்வாங்கு வாழவே பண்டிகைகள் ஆண்டுகள் தோறும் பிறக்கின்றன. இவற்றுள் புதுவருடப் பிறப்பு பிரதான பண்டிகையாக அமைகிறது. ஆங்கிலப் புத்தாண்டு ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதலாம் திகதியும், தமிழ் – சிங்களப் புத்தாண்டு ஏப்ரல் மாதம் 14.04.2021 ஆம் திகதியாக இந்த ஆண்டும் எழுச்சி பெற்று வருகின்றன.

சென்ற வருடம் சார்வரி தந்த படிப்பினைகள், பாடங்களோடு, இந்த வருடம் ‘பிலவ’ என்ற புதுவருடம் நாம் அறிந்ததும் அறியாததுமான பல பொக்கிஷங்களைச் சுமந்தவாறு தூய வாழ்வுக்கான நம்பிக்கையோடு பிறக்கின்றது.

வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் சார்வரி வருடம் பங்குனி மாத தமிழ்த் திகதி 31 ஆம் நாள், ஆங்கிலத் திகதி 14.04.2021 செவ்வாய் பின்னிரவு நாடி 48 விநாடி 51, மணி 1.39 நேரத்தில் பூர்வ பக்கத் துதியைத் திதியில், பிரீதி நாம யோகத்தில் கௌலவக் கரணத்தில், மகர லக்கினத்தில், இடப நவாம்சத்தில், சனி காலவோரையில், சந்திரன் சூக்குமவோரையில், தாமத குண வேளையில் நட்சத்திரப் பட்சியாகிய வல்லூறு உண்டித் தொழிலும், சூக்கும பட்சித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய பிலவ வருஷம் பிறக்கிறது. 13.04.2021, மணி 9.39 இரவு முதல், 14.04.2021 காலை 5.39 மணி வரை விஷுபுண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து, சிரசில் விளா இலையும், காலில் கடப்பம் இலையும் வைத்து ஸநானம் செய்து நீலம், சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும், நீலம், சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து, நீலம் பவளம் இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்னேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தர்மங்கள் இயற்றி, குரு,பெற்றோர் முதலிய பெரியாரை வணங்கி, அவர்களின் ஆசி பெற்று, உற்றார், நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் பொரிக்கறி கசப்பு சேர்ந்



தருந்தி, தாம்பூலந் தரித்து, கண்ணாடியில் முக தரிசனம் செய்து, புதிய வரு பலன்களை வாசித்தும், கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களைப் பாராயணஞ் செய்து மங்களகரமாகச் சயனஞ் செய்க.

ஸ்நானம் செய்வதற்கான மருந்து நீர் தயாரித்து கொள்ளும் போது தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இலைகளைச் சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிக் கொள்ளுதலே தோஷ நிவர்த்திக்கு வழி பிறக்கும்.

தோஷ நட்சத்திரங்களாவன:–

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் கால், பூரம், உத்தரம் இரண்டாம், மூன்றாம், நான்காம் கால்கள், அத்தம், சித்திரை முதலாம் இரண்டாம் கால்கள், பூராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் சிரசில் தேய்த்து, ஸ்நானம் செய்து, இயன்ற தான தர்மங்களைச் செய்து சங்கிரம் தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

புதிய வருடம் பிறக்கும்போது, அன்று மானிப்பாய் மருதடி விநாயப் பெருமானுக்கு இரத்தோற்சவம் நடைபெறும் பாக்கியம் இப்பூமிக்கு வாய்க்கப் பெறுகிறது.

பெரும்பாலான இந்துக்களும், பௌத்தர்களும் புது வருடப் பிறப்பன்று பொங்கல், இனிப்புப் பண்டம், இனிப்புப் பலகாரம் பகிர்ந்து புதிய வாழ்வுக்கு வழி சமைப்பார்கள். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் யாவும் எமக்கு அருள்புரிந்து, எம்மை ஒரு புது மனிதனாக இப் புதிய வருடம் மாற்றியமைக்கும் அதற்கு –

**மனதில் உறுதி வேண்டும்**
**வாக்கினிலே இனிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும்**
**கை வசமாவது விரைவில் வேண்டும்**
**தனமும் இன்பமும் வேண்டும்**
**தரணியில் பெருமை வேண்டும்**

**கண் திறந்திட வேண்டும்**
**காரியத்தில் உறுதி வேண்டும்**
**பெண் விடுதலை வேண்டும்**
**பெரிய கடவுள் காக்க வேண்டும்**
**மண்பயனுற வேண்டும்**
**வானகம் இங்கு தென்பட வேண்டும்**
**உண்மை நின்றிட வேண்டும்**
**ஓம் ஓம் ஓம் ஓம் என்று**
**உரத்துச் சொல்லிட வேண்டும்**

இனம், மதம், மொழி, நிறம், பிராந்தியம், மாகாணங்களுக்கு அப்பால், நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வு மேலோங்கும்படியாக ஒவ்வொருவரும் வரம் பெறவேண்டும்.

பிலவ புது வருடத்திலே, சகல குடிமக்களுக்கும் சகல வாய்ப்புகளும், சகல வளங்களும், சகல பேறுகளும் கிடைக்க நாமனைவருமே பாடுபட வேண்டும்.

இல்லை என்ற சொல் இல்லாதவாறு ஊர்கள் மிளிர வேண்டும்.

‘பிலவ’ என்பது பெருமையையும், பெறுமதியையும் குறிக்கும். உலகத்தின் பார்வை இலங்கையை ஒரு சுவர்க்க பூமியாக மாற்றுகின்ற அவதானத்தில் இருப்பதனால், புதிய வருடம் இலங்கையில் அற்புதங்கள் நிகழலாம். இது அவரவர் மதங்களில் சாத்தியமாகலாம். கொரோனாவுக்கு எதிராக பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் எவ்வாறு மனம் கொண்டு பிரார்த்தனை செய்து தாம் தம்மை வெற்றி கொண்டார்களோ அதே போல இலங்கையர்கள்அனைவரும் சமாதான சகவாழ்வுடன் சரிநிகர் சமானமாக ஒளிரவும் மிளிரவும் வளரவும் வேண்டுமென யாவரும் இப்புதிய ஆண்டில் பிரார்த்திப் போமாக.

விவசாயம் செழித்து விண்பார்க்க வேண்டும். வில்லங்கம் நம்மைவிட்டு தூர விலக வேண்டும். வீடு, வாசல், முற்றம் எல்லோருக்கும் வாய்க்க வேண்டும். இலவசக் கல்வியால் எல்லோரும் இந்நாட்டு மன்னராக வேண்டும். அன்னம் பொன்னாகி, பஞ்சம் பசி பட்டினியை விரட்ட வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உரிமைகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.



இலங்கை பேறாக வேண்டும். வெல்க பிலவ!!
சாந்தி நிலவ வேண்டும் – உலகில்
சாந்தி நிலவ வேண்டும்!

சார்ந்தவர் அனைவரும் சேர்ந்து வாழ்ந்திட
சக்தியனைத்தையும் நாட்டுக்காக்கிடவே
சாந்தி நிலவ வேண்டும்.

ஆண்டியும் அரசரும் சமமென்றாகும்படி
அனைவரும் ஒன்றாக வேண்டும்

கிராமங்கள் நகரங்களாக வேண்டும்
நகரங்கள் கிராமங்களாக வேண்டும்

மும்மொழி தேர்ச்சி பெற்றிட வேண்டும்
தம்மொழியால் உலகை வென்றிட வேண்டும்

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை
மதுவாசை எல்லாமே நீங்க வேண்டும்

போதை என்ற அரக்கன் வந்திடாதபடி
பூண்டோடு போதையை அழித்திடவேண்டும்

புத்தாக்கம் புதிய கண்டு பிடிப்புக்கள் என
புதிய ஆண்டு புது விதி செய்திட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரன் கொலைச்சதி, ஆயுத வர்த்தகம்:

# பாதாள உலகக் குழுத் தலைவன் சஞ்சீவ உட்பட 11 பேர் விடுவிப்பு!

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியமை, ஆயுத வர்த்தகம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினரான 'கனேமுல்ல சஞ்சீவ' அல்லது 'மாலிங்கமுவே சஞ்ஜீவ' எனப்படும் சஞ்சீவ சமரரத்ன உள்ளிட்ட 11 சந்தேகநபர்கள் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே இந்த 11 பேரையும் விடுதலை செய்வதாக நீதிவான் அறிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் கடந்த யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் புதைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டுகள், ரீ 56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களைத் தோண்டியெடுத்து கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு கடத்தி இரகசியமான முறையில் பாதாள உலகக்குழு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்தமை மற்றும் கொள்வனவு செய்தமை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை கொலை செய்யச் சதி செய்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுகளின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த 11 பேருக்கும் எதிராக வழக்குத் தொடர்வதற்குப் போதுமான சாட்சிகள் இல்லையென சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என வும் ஏனைய நான்கு சந்தேகநபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான் இந்தத் தீர்ப்பை அறிவித்தார். வத்தளை பகுதியில் துப்பாக்கியுடன் கைது செய்யப் பட்ட முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை களுக்கமைய சோதனைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கனேமுல்ல சஞ்சீவ உள்ளிட்ட 15 பேரை கைது செய்திருந்தனர்.

கனேமுல்லை சஞ்சீவ கைது செய்யப்படும் போது வேறு ஒரு வழக்குக்காக விளக்கமறியலில் இருந் தார். அவரை சுமந்திரன் எம்.பியைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டிய சந்தேகத்திலும் ஆயுத கடத்தல் தொடர்பிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் விளக்கமறியலில் இருந்து தமது பொறுப்பில் எடுத்து, வெள்ள வத்தை பொலிஸ் நிலைய சிறைக் கூண்டில் தடுத்து வைத்து 2019ஆம்ஆண்டு முதல்விசாரித்திருந் தனர். சந்தேகநபர்கள் கடந்த இரண்டரைவருடங்களுக்கும் அதிக காலம் தடுத்துவைப்புஉத் தரவின் பேரில் விளக்கமறியலில் வைத்து விசாரணைக்குஉட்படுத் தப்பட்ட நிலையிலேயே, இந்தவிவகாரத்தில் கைது செய்யப்பட்ட 15 பேரில் 11 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.









## தினம் ஒரு விவசாயத் தகவல்

### வெண்டி பரிந்துரைக்கப்பட்ட இன வகைகள்

**எம்ஐ - 5**

1. வெண்டிக்காயின் நிறம் - வெளிர் பச்சை, நடுத்தர அளவு நீளமானது.
2. முனைகள் (7- 9).
3. தண்டு நிறம் - குறைந்தது முதல் நடுத்தரமான அந்தோசயினின் நிறமி.
4. மேல் இலைகள் - ஆழமாகப் பதிக்கப்பட்டவை.
5. உலர்ந்த வலயத்தில் சிறுபோகம் தவிர கால போகத்திற்கும் (மஹா பருவத்திற்கும்) ஏற்றது.

**எம்ஐ - 7**

1. வெண்டிக்காயின் நிறம் - மஞ்சள் கலந்த பச்சை, நடுத்தர அளவு நீளமானது.
2. முனைகள் (7 - 9).
3. தண்டு நிறம் - நடுத்தர அந்தோசயினின் நிறமி.
4. மேல் இலைகள் - ஆழமற்ற மடல்களை கொண்டது.
5. உலர்ந்த வலயத்தில் சிறுபோகத்திற்கு ஏற்றது மற்றும் பிற பிராந்தியங்களில் சிறுபோகம் கால போகம் இரண்டிற்கும் ஏற்றது.

**ஹரிதா**



1. வெண்டிக்காயின் நிறம் - அடர் பச்சை, நடுத்தர அளவு நீளமானது
2. முனைகள் (5 - 6).
3. தண்டு - வலுவான அந்தோசயினின் நிறமி.
4. மேல் இலைகள் ஆழமாகப் பதிந்திருக்கும்.
5. Yellow mosaic virus நோய்க்கு சகிப்புத்தன்மை கொண்டது.
6. பொதுவாக தீவின் சகல பாகங்களுக்கும் ஏற்றது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி





Vadakaniniyam wishes
a very happy and prosperous
Tamil new year

Vadakaniniyam wants to reduce poverty, create high quality employment and grow the small business to bring back economic success to the northern region.
We want to do it in consultation with the community
Please join us for a zoom meeting on Saturday April 17th at 7 PM
Meeting ID: 857 8561 7560 Passcode: D96wdb Tel.: +94775930335

எங்கள்
அங்கத்தவர்களுக்கும்
நண்பர்களுக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

VK வடகனியம்
வடக்கை கணினிமயமாக்குவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir




# ஹிட்லராக மாறுவார் கோட்டா!

## இராஜாங்க அமைச்சர் திலும் பகிரங்க அறிவிப்பு



தேவை ஏற்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, ஹிட்லராக மாறுவார்.

– இவ்வாறு போக்குவரத்துத் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்திம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுப்பார் என்று வாக்களித்த 69 இலட்சம் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர் அவ்வாறு நடந்துகொள்ளாததால் அரசு மீது மக்கள் குறை கூறுகின்றார்கள்.

பௌத்த தேரர்களும் ஜனாதிபதி, ஹிட்லர் போன்று செயற்பட வேண்டும் எனக் கோருகின்றார்கள்.

ஆனால், ஜனாதிபதிக்கு ஒரே தடவை யில் ஹிட்லர் ஆக மாறவேண்டி இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனினும், சில பிரிவினரின் செயற்பாடுகளை அடுத்து அவர் ஹிட்லராக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

அவ்வாறு ஜனாதிபதி ஹிட்லர் ஆன தன் பின்பு அரசு மீது பழி சுமத்தப்படு வதும் நின்றுவிடும். அத்தோடு அனைத்து செயற்பாடுகளும் சரியாக முன்னெடுக்கப்படும். – என்றார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுந்தரப்பின் தனித்தனியான சந்திப்புக்களில் இருந்து மக்கள் பாரதூரத் தன்மையை புரிந்து கொள்ளவேண்டும்

## மனுஷ நாணயக்கார சுட்டிக்காட்டு



ஆளுந்தரப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஏனைய பங்காளிக் கட்சிகள் தனித்து சந்திப்புக்களை நடத்துவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது.

எவ்வாறிருப்பினும் இவ்வாறு பங்காளிக் கட்சிகள் தனித்து செயற்பட ஆரம்பித்துள்ளதன் மூலம் பாரதூரமான செய்தியொன்றைக் கூறுகின்றன.

அந்த பாரதூரமான செய்தியை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பல கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றி ஒரு வருடம் நிறைவடைந்த பின்னர் பங்காளிக் கட்சிகள் தனித்த சந்திப்புக்களை நடத்துகின்றன என்றால் அரசாங்கத்திற்குள் முரண்பாடுகள் ஆரம்பித்துள்ளன என்பது தெளிவாகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சென்று அங்கு மக்களிடம் தனது பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதோடு, மாத்திரமன்றி, அவை தொடர்பில் ஆராய்வதற்கு நாமல் ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலணியொன்றையும் நியமித்துள்ளார். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஏனைய அமைச்சர் பெயரளவில் வெறும் அமைச்சர்களாக மாத்திரமே உள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முன்னின்று செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சகல தரப்பினரும் தனித்து செயற்பட ஆரம்பித்துள்ளதன் மூலம் வழங்கும் செய்தி மிகப் பாரதூரமானதாகும். இந்தப் பாரதூரமான செய்தியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். - என்றார்.

# கொள்ளையிடப்பட்ட தொலைபேசி ஈ.எம்.ஐ. இலக்கங்கள் பொலிஸ் இணையத்தளத்தில்

கொள்ளையடிக்கப்பட்ட தொலைபேசிகளின் ஈ.எம்.ஐ இலக்கங்களை பொலிஸ் தலைமையகம் தனது இணையத் தளத்தில் பகிரங்கப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில், ஒருவர் பயன்படுத்திய தொலைபேசியையோ அல்லது புதிதாக ஒரு தொலைபேசியையோ கொள்வனவு செய்யும் போது, முதலில் தான் கொள்வனவு செய்ய உள்ள தொலைபேசியின் ஈ.எம்.ஐ இலக்கத்தைப் பெற்று, பொலிஸ் இணையத் தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள திருட்டுப்போன தொலைபேசிகளின் ஈ.எம்.ஐ இலக்கங்களுடன் ஒப்பீடு செய்து தகவல்களை உறுதி செய்துகொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களை கேட்டுக்கொள்கின்றனர்.

அவ்வாறு ஒப்பீடுசெய்வதன் ஊடாகத்தான் கொள்வனவு செய்யும் தொலைபேசி சிக்கலுக்கு உரியதல்ல என்பதை ஒருவர் உறுதி செய்துகொள்ளக் கூடியதாக இருக்கும் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

திருடப்பட்ட தொலைபேசிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையிலேயே, பொலிஸார் வீண் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு பொது மக்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

# ஹற்றனில் பஸ் விபத்து: ஒருவர் பலி; பெண் காயம்

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஹற்றன் ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள மஞ்சள் கோட்டுக்கருகில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) பகல் 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலியானார் எனவும் மற்றுமொரு பெண் படுகாயமடைந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் குபேரன் கருணாகரன் வயது 28 மதிக்கத்தக்கவர் எனவும் இவர் நோர்வூட் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

விக்டன் பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் அதே பக்கத்தில் சென்ற குறித்த இளம் குடும்பஸ்தர் மீதி மோதியுள்ளது. அந்த நபர் பஸ்ஸில் மோதுண்டு வீதியில் சென்ற பெண் மீது வீழ்ந்து நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் மோதுண்டு மீண்டும் வீதியின் பக்கம் வீழ்ந்தார் எனவும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பஸ் சாரதி, பஸ்ஸை நடு வீதியில் விட்டபடி இறங்கி பொலிஸ் நிலையம் நோக்கி ஓடியுள்ளார். இதனைத் தொடர்ந்து சில நிமிடங்கள் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த இருவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது ஆண் மரணமடைந்துள்ளார் எனவும் மற்றுமொரு பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக சாரதி கைது செய்யப்பட்டுள்ளமையுடன் பொலிஸார் பஸ்ஸையும் தடுத்து வைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய புனர்வாழ்வு வர்த்தமானியை தடைசெய்யக் கோரி உயர் நீதிமன்றில் 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்

அடிப்படைவாத செயற்பாடுகள் தொடர்பாக சரணடையும் அல்லது கைது செய்யப்படும் நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் சட்ட விதிகள் உள்ளடக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட நிலையில், அந்த வர்த்தமானிக்குத் தடை கோரி உயர் நீதிமன்றில் ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வரையில் இந்த 5 மனுக்களும் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி வர்த்தமானி, அரசமைப்பின் 3 ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது எனக் கூறியே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர்களில் ஒருவரான அம்பிகா சற்குணநாதன், மாற்றுக் கொள்கைளுக்கான மத்திய நிலையம், மடவளை பசாரை சேர்ந்த அப்துல் ஜவாத் இன்சாப், அப்துல் வஹாப் ஹில்மி அஹமட் மற்றும் பாத்திமா சில்மா மொஹிதீன் அஹமட், அரநாயக்கவைச் சேர்ந்த எம்.எல். நௌபர் அமீர் ஆகியோரால் இந்த 5 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் உள்ளிட்டவர்கள் ஊடாக இந்த மனுக்கள் இவ்வாறு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மனுக்களில் பாதுகாப்பு செயலர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன, புனர்வாழ்வு ஆணையாளர்நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் தர்ன ஹெட்டி ஆராச்சி, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சட்ட மா அதிபர் ஆகிய நால்வர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஏனைய இரு மனுக்களில் புனர்வாழ்வு ஆணையாளர்நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் தர்ன ஹெட்டி ஆரச்சி, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சட்ட மா திபர் ஆகிய மூவர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27 ஆம் அத்தியாயத்தின் கீழ் ஜனாதிபதியால் கடந்த மார்ச் 12 ஆம் திகதி 2218/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி ஜனாதிபதியினால் கையெழுத்திடப்பட்டு மார்ச் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த புனர்வாழ்வளித்தல் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது ஒழுங்கு விதி, இந்த வர்த்தமானியின் உள்ளடக்கத்தை '2021 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பயங்கரவாத தடுப்பு ( வன்முறையான மட்டு மீறிய மதக் கொள்கையைக் கொண்டிருப்பதற்கு எதிரான தீவிரமயமற்றதாக்குதல்) ஒழுங்குவிதிகள்' என அறிமுகம் செய்துள்ளது.

இந்த வர்த்தமானியின் 5 ஆம் ஒழுங்குவிதியின் 4 ஆவது உப ஒழுங்கு விதி, அடிப்படைவாத செயற்பாடுகள் தொடர்பாகச் சரணடையும் அல்லது கைது செய்யப்படும் நபர் ஒருவர், வழக்கு விசாரணைகள் இன்றி புனர்வாழ்வுக்கு உட்படுத்த நீதிவான் ஒருவருக்கு அதிகாரமளிக்கின்றது. இதற்காக சட்ட மா அதிபரின் எழுத்து மூல அனுமதி மட்டுமே அவசியமாகிறது.

குறித்த ஒழுங்கு விதி பின்வருமாறு கூறுகின்றது.

' புரியப்பட்ட தவறின் தன்மைக்கு இணங்க சரணடைந்தவர் ஒருவருக்கு அல்லது, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் ஒருவருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பதிலாக புனர்வாழ்வு நிலையமொன்றில் அவருக்கு புனர்வாழ்வளிக்கப்படுதல் வேண்டும் என சட்ட மா அதிபர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய சரணடைந்தவர் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் சட்ட மா அதிபரின் எழுத்து மூல அங்கீகாரத்துடன் நீதிவான் ஒருவர் முன் நிறுத்தப்படுதல் வேண்டும்.

நீதிவான் ஒருவர், 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் அல்லாத வேறு ஏதும் தவறுகளை அத்தகைய சரணடைந்த அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர் புரிந்துள்ளாரா என்பதைக் கருத்தில் கொண்டு ஒரு புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருடத்துக்கு மேற்படாத காலப்பகுதிக்காக அவரை புனர்வாழ்வுக்காக ஆற்றுப்படுத்தி கட்டளையாக்கலாம்.

எனினும் இலங்கையின் அரசமைப்பு, கைது செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கு முகம் கொடுப்பதற்கான அடிப்படை உரிமை உள்ளதாகக் கூறும் நிலையில், இந்த வர்த்தமானி அறிவித்தல், இலங்கையின் அரசமைப்பையும், சர்வதேச இணக்கப்பாடுகளையும் குறிப்பாக ஐ.சி.சி.பி.ஆர். எனப்படும் சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டையும் மீறும் வகையில் அமைந்துள்ளதாக மனுதாரர்கள் தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக குறித்த புனர்வாழ்வு வர்த்தமானி, அரசமைப்பின் 3 ஆவது அத்தியாயத்தின் கீழ் உள்ள 10 ஆவது உறுப்புரையான மத சுதந்திரம், சிந்தனை சுதந்திரம், மனசாட்சியை பின்பற்றுவதற்கான சுதந்திரம், 11 ஆவது உறுப்புரையான சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், 13 ஆவது உறுப்புரையான தன்னிச்சையாகக் கைது செய்யப்படாமல், தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை, 14 ஆம் உறுப்புரையான பேச்சு, ஒன்றுகூடல், நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றை மீறும் வகையில் அமைந்துள்ளதாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

எனவே குறித்த வர்த்தமானியை அமுல்படுத்துவதை உடனடியாகத் தடை செய்யுமாறும், மனுக்களை விசாரணைக்கு ஏற்று, மனுதாரர்களுக்கு அரசமைப்பு ஊடாக வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் 10,11,12(1), 13 (1), 13 (2), 13 (3), 13 (4),13 (3), 14 (1) அ, ஆ,இ, ஈ, உ, ஊ,எ ஆகிய உறுப்புரைகள் மீறப்பட்டுள்ளன என அறிவிக்குமாறும் மனுதாரர்கள் உயர் நீதிமன்றைக் கோரியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org